بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ    نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ    وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

மஸீஹ் மவ்வூது(அலை)
சிறப்பிதழ்

தொகுதி
7
வருடாந்திர
சந்தா
ரூபாய் 575/-

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்
Weekly
**BADAR** Qadian
TAMIL

இதழ்
10 - 11
ஆசிரியர்
முஸ்ஸம்மில்
அஹ்மது
துணை ஆசிரியர்
அ.அப்துர்
ரஹ்மான்
தாஹிர்

Postal Reg. No. GDP-39/2020-22 | ஹிஜ்ரி கமரி 1443-ஷஃபான் 06-13 | ஹிஜ்ரி ஷம்ஸி 1401-அமான் 10-17 | மார்ச் 10-17, 2022


## நான் உமது தூதுச் செய்தியை பூமியின் எல்லைகள் வரை எட்ட வைப்பேன்


இல்ஹாம் – ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்
(தத்கிரா பக்கம் 260 – டிசம்பர் 2006 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

நாங்கள் ஜமாஅத்தின் பெயரை உலகிலிருந்தே அழித்து விடுவோம் என்று நமது எதிரிகள் கூறுகின்றனர். அல்லாஹ்வின் மீது அன்பு கொள்ளக் கூடியவர்களையும், நன்றியுணர்வுடன் இருப்பவர்களையும் யார் அழிக்க முடியும்? எதிரிகள் எவ்வளவு அழுத்தம் கொடுக்க முடியுமோ கொடுக்கட்டும். ஆனால் இந்த ஜமாஅத்தை இறைவன் தனது மார்க்கத்தை உலகில் பரப்புவதற்காக நிலைநாட்டியுள்ளான். எனவே எல்லா சந்தர்ப்பத்திலும் இறைவனே இதனை பாதுகாக்கின்றான். மேலும் உதவி செய்கின்றான். ஒரு தலைமுறைக்குப் பிறகு அடுத்த தலைமுறையின் உள்ளத்தில் இதன் மீதானநேசத்தையும், இதன் நோக்கங்களை முழுமை செய்ய வேண்டும் என்ற துடிப்பையும் அவனே ஏற்படுத்திக் கொண்டு செல்கின்றான்.

(ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் மூமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்)
அவர்களின் குத்பா பேருரை – 8 ஜனவரி 2021)








ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் 15 ஜனவரி 2021 அன்று
MTA கானா என்ற புதிய சேனலை துவக்கி வைத்து துஆ செய்தவாறு





ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் 2 ஏப்ரல் 2021 அன்று
சீன மொழியில் ஜமாஅத்தின் புதிய வலைதளத்தை துவக்கி வைத்து துஆ செய்தவாறு





ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் 9 ஏப்ரல் 2021 அன்று
திருக்குர்ஆன் வலைதளத்தை துவக்கி வைத்து துஆ செய்தவாறு




ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள்
02 ஜூலை 2021 அன்று Ahmadipedia என்ற
வலைதளத்தை துவக்கி வைத்து துஆ செய்தவாறு



ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள்
27 ஜூன் 2021 அன்று MTA இன்டர்நேஷனல் Online
மாநாட்டில் சொற்பொழிவு நிகழ்த்தியவாறு






ஸய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் காதியான் ஆண்டு மாநாடு 2021 சந்தர்ப்பத்தின்போது லண்டனிலிருந்து நிறைவுரை ஆற்றி துஆ செய்தவாறு














2021–டிசம்பர் 24, 25, 26 ஆகிய தேதிகளில் நடைபெற்ற காதியான் ஆண்டு மாநாட்டின் சில காட்சிகள்

பொருளடக்கம்


| எண் | தலைப்புகள் | பக்கம் |
|---|---|---|
| 1. | தலையங்கம் | 1 |
| 2. | திருக்குர்ஆன் மற்றும் நபிமொழி | 2 |
| 3. | ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோள்கள் | 3 |
| 4. | இறையிருப்பு – துஆ ஏற்றுக் கொள்ளப்படுதலின் ஒளியில் | 4 |
| 5. | ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு – திருக்குர்ஆன் மீது அன்னார் கொண்டிருந்த அன்பு மற்றும் திருக்குர்ஆனுக்கு அன்னார் ஆற்றிய தொண்டு | 9 |
| 6. | அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முன்னேற்றங்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் முன்னறிவிப்புகளின் ஒளியில் | 14 |


لَآ اِلٰہَ اِلَّا اللّٰہُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰہِ

# ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வெகுமதிக்கான அறைகூவல் பீர் மெஹர் அலி ஷாஹ்விற்கு சவால்!

ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பொலிவுமிக்க இந்த வெகுமதிக்கான அறைகூவலை நாம் அன்னார் (அலை) அவர்களின் நுஸூலுல் மஸீஹ் என்ற புத்தகத்திலிருந்து முன் வைக்கின்றோம். ஏற்கனவே நாம் கூறியதுபோன்று 70 நாட்களுக்கான காலக்கெடுவிற்குள் ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இஜாஸுல் மஸீஹ் என்ற பெயரில் செறிவு மிக்க அரபியில் சூரா ஃபாத்திஹாவின் விளக்கவுரையை வெளியிட்டு விட்டார்கள். ஆனால் பீர் மெஹர் அலி ஷா கோல்டவி எந்த விளக்கவுரையையும் வெளியிடவில்லை. இருப்பினும் ஒன்றரை வருடங்களுக்குப் பிறகு அவர் ஸைஃப் சஷ்தியாயி என்ற பெயரில் உருதுவில் எழுதப்பட்டிருந்த ஒரு நூலை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அனுப்பி வைத்தார். அதில் விளக்கவுரைக்கான எந்த அடையாளமும் இருக்கவில்லை. அறிவீனமான ஆட்சேபனைகளே அதில் இருந்தன. இது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பதில் வழங்கினார்கள். அன்னார் (அலை) அவர்களின் சில பதில்கள், பொலிவுமிக்க வழிகாட்டல்கள் மற்றும் அன்னாரின் வெகுமதிக்கான அறைகூவலை இந்த இதழில் முன் வைக்கின்றோம்.

**விளக்கவுரையில் தவறு கண்டுபிடித்தால் ஒவ்வொரு தவறுக்கும் 500 ரூபாய் பரிசுக்கான அறைகூல்**

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நீங்கள் எமக்கு போட்டியாக ஓர் அரபி நூலை எழுதுங்கள். பின்னர் அரபி மொழி அறிந்தவர்கள் அதற்கு நீதிபதியாக நியமிக்கப்படுவார்கள். உங்களது நூல் புலமைமிக்கதாக நிரூபணமானால் எனது அனைத்து வாதமும் பொய்யாகி விடும் என்று நாம் பலமுறை இந்த விளம்பரத்தை செய்திருந்தோம். நான் தற்போதும் இதனை ஒப்புக் கொள்கின்றேன். எனக்கெதிராக தஃப்ஸீர் எழுதிய பிறகு உமது விளக்கவுரை சொல்லாலும், பொருளாலும் உயர்ந்ததாக நிரூபணமாகி விட்டால் அந்நிலையில் நீர் எமது விளக்கவுரையின் தவறுகளை கண்டுபிடித்தால் ஒவ்வொரு தவறுக்கும் நான் 500 ரூபாய் பரிசு வழங்குவேன். சுருக்கமாக, அறிவீனமான ஆட்சேபனைகளை செய்வதற்கு முன்பு அரபியில் தஃப்ஸீர் எழுதுவதன் மூலம் உங்களது அரபி புலமையை நிரூபித்துக் காட்டுங்கள். ஏனென்றால் எந்தக் கலையை ஒருவர் அறியாதவராக இருக்கின்றாரோ அவர் அந்த கலையில் செய்யும் விமர்சனங்கள் ஒப்புக் கொள்வதற்கு தகுதி வாய்ந்தவையாக இருப்பதில்லை. ஒரு பொறியாளர் இன்னொரு பொறியாளரை விமர்சனம் செய்ய முடியும். ஒரு கொல்லன் இன்னொரு கொல்லனை விமர்சனம் செய்ய முடியும். ஆனால் ஒரு அறிவுமிக்க பொறியாளரை விமர்சனம் செய்வதற்கு ஒரு தோட்டக்காரனுக்கு உரிமை கிடையாது. (நுஸூலுல் மஸீஹ், ரூஹானீ கஸாயின் தொகுதி 18 பக்கம் 440)

**எவரால் ஒரு வரி கூட அரபியில் எழுத முடியாதோ அவர் அரபியின் தவறுகளை காண்பதற்கு உரிமை பெற்றிருக்கின்றாரா?**

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: உங்களுடைய தனிப்பட்ட தகுதி என்னவென்றால், ஒரு வரி கூட அரபியில் எழுத முடியாது. எனவே ஸஃபை சிஷ்தாயி எனும் நூலில் நீங்கள் திருட்டுப் பொருளை உங்களது செல்வமாக ஆக்கிக் கொண்டுள்ளீர்கள். இந்த அளவு திறமையை வைத்துக் கொண்டு ஏன் உங்களுக்கு வெட்கம் வருவதில்லை. மனிதா! முதலில் உமது அறிவு புலமையை நிரூபித்துக் காட்டவும். பிறகு எனது நூலில் குறைகளை காணும். ஒவ்வொரு தவறுக்கும் எம்மிடமிருந்து 500 ரூபாய் பெற்றுக் கொள். எனக்கு போட்டியாக ஓர் அரபி நூலை எழுதி என்னுடைய இந்த எழுத்து அற்புதத்தை பொய் என நிரூபித்துக் காட்ட வேண்டும். வேதனை என்னவென்றால், 10 ஆண்டு காலம் கழிந்து விட்டது. எந்த நபரும் கண்ணியமான வழிமுறையுடன் என்னுடன் போட்டி போட முன் வரவில்லை. ஒருவேளை ஒருவர் போட்டியிட்டார் என்றால் இந்த அளவு தான் போட்டி போட்டுள்ளார். அதாவது எமது இன்ன சொல்லில் இன்ன தவறு உள்ளது. எமது இன்ன வாக்கியம் இன்ன நூலிலிருந்து திருடப்பட்டுள்ளதாக தெரிகிறது என்றே கூறி வந்துள்ளார். ஆனால் தெளிவாக வெளிப்பட்ட விஷயம் என்னவென்றால், மனிதன் சுயமே அறிவு படைத்தவனாக நிரூபணமாகாதவரை அவரது விமர்சனங்களை எவ்வாறு சரியானதாக ஒப்புக் கொள்ள முடியும்? அவர் தவறிழைப்பதற்கு சாத்தியமில்லையா? எந்த நபர் போட்டியில் பங்கு பெற்று எழுதுவதற்கு ஆற்றல் பெறவில்லையோ அவர் எவ்வாறு நூலில் இடம் பெற்றுள்ள வாக்கியங்களை வேறு நூலிலிருந்து திருடப்பட்டதாக கூற முடியும். அவ்வாறு செய்வது சாத்தியமென்றால் அவர் ஏன் போட்டிக்கு வருவதில்லை? அவர் ஏன் ஓநாயைப் போன்று ஒடுகின்றார்.

அறிவிலியே! முதலில் விளக்கவுரையை தெளிவான அரபியில் எழுதி உமது அரபி புலமையை நிரூபித்துக் காட்டும். அந்நிலையில் உமது ஆட்சேபனைகளும் கவனத்தில் கொள்ளப்படுவதற்கு தகுதி பெற்று விடும். இல்லையென்றால் எந்த ஆதாரமுமின்றி என் மீது ஆட்சேபனை செய்வதும், சில முறை பழி சுமத்துவதும், சில முறை அரபு இலக்கண பிழை என்று கூறுவதும் வெற்றுக் கூச்சலாக இருக்கும்.

அறிவிலியே! வெட்கமற்றவரே! ஒரு சூராவின் விளக்கவுரையை தெளிவான அரபியில் வெளியிட்டுக் காட்டும். பின்னர் எனது நூலின் தவறுகளை காண்பதற்கு எல்லாருடைய பார்வையிலும் உமக்கு தகுதி இருக்கும். எந்த நபர் தெளிவான அரபியில் ஆயிரக்கணக்கான வாக்கியங்களை எழுதி விட்டாரோ அதுவும் வெறும் வீணான வகையில் அல்ல. மாறாக, உண்மையான ஞானங்களை எடுத்துரைத்தவாறு எழுதியிருக்கும்போது அதனை எவ்வாறு மேலோட்டமாக (நீர்) மறுக்க முடியும். வெறும் வாய்ப்பேச்சுக்கள் சான்றாகி விட முடியுமா? இந்த புத்தகத்தில் தவறு உள்ளது என்று வெறும் வாயளவில் கூறி விடுவதால் என்ன திறமை நிரூபணமாகும். அல்லது இன்ன புத்தகத்திலிருந்து சில வாக்கியங்கள் திருடப்பட்டுள்ளன என்று கூறுவது எவ்வாறு சரியாக இருக்கும். இதன் மூலம் உமது திறமை எவ்வாறு நிரூபணமாகும்? சிறப்பு நிரூபணமாகாத நபரின் விமர்சனம் சரியானது என்று எவ்வாறு ஒப்புக் கொள்ள முடியும்? தமது சிறப்புகளுக்கு சில உதாரணங்களை காட்டி விடுகின்ற முழுமையான மனிதர்கள் மீது ஆட்சேபனை செய்பவரைவிட பைத்தியக்காரர் வேறு யாராகவும் இருக்க முடியாது.

(நுஸூலுல் மஸீஹ், ரூஹானீ கஸாயின் தொகுதி 18 பக்கம் 441) – (தொடரும்...)

(மன்ஸூர் அஹ்மது மஸ்ரூர்)

## [திருக்குர்ஆனிலிருந்து....]

۞ وَعَدَ اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا مِنْكُمْ وَعَمِلُوا الصّٰلِحٰتِ لَيَسْتَخْلِفَنَّهُمْ فِى الْاَرْضِ كَمَا اسْتَخْلَفَ الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ ۪ وَلَيُمَكِّنَنَّ لَهُمْ دِيْنَهُمُ الَّذِى ارْتَضٰى لَهُمْ وَلَيُبَدِّلَنَّهُمْ مِّنْۢ بَعْدِ خَوْفِهِمْ اَمْنًا ؕ يَعْبُدُوْنَنِىْ لَا يُشْرِكُوْنَ بِىْ شَيْـًٔا ؕ وَمَنْ كَفَرَ بَعْدَ ذٰلِكَ فَاُولٰٓئِكَ هُمُ الْفٰسِقُوْنَ○

**பொருள்:** அல்லாஹ் உங்களுள் நம்பிக்கை கொண்டு நற்செயலாற்றுபவர்களை, அவர்களின் முன்னோர்களை கலீஃபாவாக (தலைவராக) ஆக்கியது போன்று இப்பூமியில் கலீஃபாவாக ஆக்குவதாகவும் அவன் அவர்களுக்காக விரும்பிய அவர்களின் மார்க்கத்தை அவர்களுக்கு உறுதிப்படுத்துவதாகவும் அவன் அவர்களுக்கு அவர்களது அச்சத்திற்குப் பிறகு அதற்குப் பதிலாக அமைதியினை வழங்குவதாகவும் அவர்களிடம் வாக்குறுதியளித்துள்ளான். அவர்கள் என்னை வணங்குவார்கள். எதனையும் எனக்கு இணையாக்கமாட்டார்கள். இதன் பின்னரும் நிராகரிப்பவர்கள் கட்டுப்படாதவர்களாவார்கள். (24:56)

يُسَبِّحُ لِلّٰهِ مَا فِى السَّمٰوٰتِ وَمَا فِى الْاَرْضِ الْمَلِكِ الْقُدُّوْسِ الْعَزِيْزِ الْحَكِيْمِ○ هُوَ الَّذِىْ بَعَثَ فِى الْاُمِّيّٖنَ رَسُوْلًا مِّنْهُمْ يَتْلُوْا عَلَيْهِمْ اٰيٰتِهٖ وَيُزَكِّيْهِمْ وَيُعَلِّمُهُمُ الْكِتٰبَ وَالْحِكْمَةَ ۗ وَاِنْ كَانُوْا مِنْ قَبْلُ لَفِىْ ضَلٰلٍ مُّبِيْنٍ○ وَّاٰخَرِيْنَ مِنْهُمْ لَمَّا يَلْحَقُوْا بِهِمْ ؕ وَهُوَ الْعَزِيْزُ الْحَكِيْمُ○ ذٰلِكَ فَضْلُ اللّٰهِ يُؤْتِيْهِ مَنْ يَّشَآءُ ؕ وَاللّٰهُ ذُو الْفَضْلِ الْعَظِيْمِ

**பொருள்:** வானங்களிலும், பூமியிலுமுள்ளவையெல்லாம், அரசனும் தூயவனும் வல்லமையுள்ளவனும், நுண்ணறிவுள்ளவனுமாகிய அல்லாஹ்வின் தூய்மையை எடுத்துரைக்கின்றன. அவனே எழுதப்படிக்கத் தெரியாத மக்களுக்கு – அவர்கள் இதற்கு முன்னர் தெளிவான வழிகேட்டில் இருந்தபோதிலும் – அவனது கட்டளைகளைப் படித்துக்காட்டி, அவர்களைத் தூய்மைப்படுத்தி, அவர்களுக்கு வேதத்தையும், நுட்பமான அறிவையும் கற்றுக் கொடுக்கும் ஒரு தூதரை அவர்களிலிருந்தே அனுப்பினான்.

மேலும் இதுவரை, அவர்களுடன் சேராத மற்றவர்களுக்கிடையிலும் (அவரை எழுப்புவான்.) அவன் வல்லமை மிக்கவனும் நுண்ணறிவுள்ளவனுமாவான். இது அல்லாஹ்வின் அருளாகும். தான் விரும்புபவருக்கு அவன் அதனை வழங்குகின்றான். அல்லாஹ் பேரருள் உடையவனாவான். (62:2–5)

## [நபிமொழியிலிருந்து....]

۞ عَنْ اَبِىْ هُرَيْرَةَ رَضِىَ اللّٰهُ عَنْهُ قَالَ: قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ : كَيْفَ اَنْتُمْ اِذَا نَزَلَ ابْنُ مَرْيَمَ فِيْكُمْ وَاِمَامُكُمْ مِنْكُمْ وَفِىْ رِوَايَةٍ فَاَمَّكُمْ مِنْكُمْ ۔ (بخاری، کتاب الانبیاء، باب نزول عیسٰی بن مریمؑ)

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: “மர்யமின் மகன் (அதாவது ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு ஒப்பானவர்) உங்களிலிருந்து தோன்றி உங்களுக்கு இமாமாக இருக்கும்போது உங்களது நிலை எவ்வாறிருக்கும்?”

இன்னோர் அறிவிப்பில், “அவர்கள் உங்களிலிருந்து தோன்றியதன் காரணமாக உங்களுக்கு இமாமத் செய்கின்ற கடமைகளை நிறைவேற்றுவார் என்றும் வந்துள்ளது.”

(புகாரி கிதாபுல் அன்பியா)

۞ عَنْ اَبِىْ هُرَيْرَةَ رَضِىَ اللّٰهُ عَنْهُ عَنِ النَّبِىِّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ : لَا تَقُوْمُ السَّاعَةُ حَتّٰى يَنْزِلَ عِيْسَى بْنُ مَرْيَمَ حَكَمًا مُقْسِطًا وَاِمَامًا عَدْلًا فَيَكْسِرُ الصَّلِيْبَ وَيَقْتُلُ الْخِنْزِيْرَ وَيَضَعُ الْجِزْيَةَ وَيَفِيْضُ الْمَالَ حَتّٰى لَا يَقْبَلَهٗ اَحَدٌ ۔

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

“நெறி நீதி தீர்ப்பவராகவும், நீதியுடன் செயல்படுகின்ற இமாமாகவும் இருக்கப்போகின்ற மர்யமின் மகன் ஈஸா தோன்றி விடாத வரை கியாமத் வராது. (அன்னார் தோன்றும்போது) அவர் சிலுவையை முறிப்பார். பன்றியைக் கொல்லுவார். ஜிஸ்யா செலுத்தும் வழிமுறையை முடிவுக்குக் கொண்டு வருவார். மேலும் அவர் எத்தகைய செல்வத்தை பங்கிட்டுக் கொடுப்பார் என்றால் அதனை மக்கள் ஏற்றுக் கொள்வதற்கு ஆயத்தமாக இருக்க மாட்டார்கள்.”

(சுனன் இப்னி மாஜா கிதாபுல் ஃபிதன் பாபு ஃபித்னதுத்தஜ்ஜாலி வ ஹுரூஜி ஈஸப்னி மர்யம் வ ஹுரூஜி யஃஜூஜ் வ மஃஜூஜ்.)

۞ اَلَا اِنَّ عِيْسَى بْنَ مَرْيَمَ لَيْسَ بَيْنِىْ وَبَيْنَهٗ نَبِىٌّ وَلَا رَسُوْلٌ ، اَلَا اِنَّهٗ خَلِيْفَتِىْ فِىْ اُمَّتِىْ مِنْ بَعْدِىْ ، اَلَا اِنَّهٗ يَقْتُلُ الدَّجَّالَ وَيَكْسِرُ الصَّلِيْبَ وَيَضَعُ الْجِزْيَةَ ، وَتَضَعُ الْحَرْبُ اَوْزَارَهَا ، اَلَا مَنْ اَدْرَكَهٗ فَلْيَقْرَأْ عَلَيْهِ السَّلَامَ ۔

(வாக்களிக்கப்பட்ட மஸீஹ்) ஈஸப்னு மர்யத்திற்கும் எனக்கும் இடையில் எந்த நபியோ ரஸூலோ கிடையாது. நன்றாக நினைவிற் கொள்ளுங்கள். அவர் எனக்குப் பிறகு எனது உம்மத்தில் கலீஃபாவாக இருப்பார். நிச்சயமாக அவர் தஜ்ஜாலை கொலை செய்வார். சிலுவையை (அதாவது சிலுவைக் கொள்கைளை) முறிப்பார். ஜிஸ்யாவை முடிவுக்கு கொண்டு வருவார். (அதாவது அந்த நடைமுறை இருக்காது. ஏனென்றால்) அந்த நேரத்தில் (மார்க்கப்) போர்கள் முடிவுக்கு வரும். நினைவிற் கொள்ளுங்கள். எவருக்கு அவரை சந்திப்பதற்கான நற்பேறு கிடைக்குமோ அவர் எனது ஸலாத்தை அவருக்குக் கண்டிப்பாக எட்ட வைக்கவும். (தப்ரானி)

۞ عَنْ حُذَيْفَةَ رَضِىَ اللّٰهُ عَنْهُ قَالَ: قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ : تَكُوْنُ النُّبُوَّةُ فِيْكُمْ مَا شَآءَ اللّٰهُ اَنْ تَكُوْنَ ثُمَّ يَرْفَعُهَا اللّٰهُ تَعَالٰى ثُمَّ تَكُوْنُ خِلَافَةٌ عَلٰى مِنْهَاجِ النُّبُوَّةِ مَا شَآءَ اللّٰهُ اَنْ تَكُوْنَ ثُمَّ يَرْفَعُهَا اللّٰهُ تَعَالٰى ثُمَّ تَكُوْنُ مُلْكًا عَاضًّا فَتَكُوْنُ مَا شَآءَ اللّٰهُ اَنْ تَكُوْنَ ثُمَّ يَرْفَعُهَا اللّٰهُ تَعَالٰى ثُمَّ تَكُوْنُ مُلْكًا جَبْرِيَّةً فَيَكُوْنُ مَا شَآءَ اللّٰهُ اَنْ يَكُوْنَ ثُمَّ يَرْفَعُهَا اللّٰهُ تَعَالٰى ثُمَّ تَكُوْنُ خِلَافَةٌ عَلٰى مِنْهَاجِ النُّبُوَّةِ ثُمَّ سَكَتَ

ஹஸ்ரத் அபூஹுஸைஃபா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் நாடும் வரை உங்களிடத்தில் இந்த நுபுவ்வத் இருக்கும். பிறகு அல்லாஹ் அதை எடுத்துக் கொள்வான். பிறகு நுபுவ்வத் வழியிலான கிலாஃபத் உருவாகும். அல்லாஹ் நாடும் வரை அது இருக்கும். பிறகு அல்லாஹ் அதையும் எடுத்துக் கொள்வான். பிறகு அவனது நியதிக்கேற்ப துன்பத்தை தரக்கூடிய கொடுங்கோல் ஆட்சி இருக்கும். பிறகு அதையும் அல்லாஹ் எடுத்துக் கொள்வான். பிறகு பலவந்தமான ஆட்சி ஏற்படும். பிறகு அல்லாஹ் அதையும் எடுத்துக் கொள்வான்.

பின்னர் **நுபுவ்வத் வழியிலான கிலாஃபத் இருக்கும்.** இதைக் கூறி விட்டு பெருமானார் (ஸல்) அவர்கள் மௌனமாகி விட்டார்கள்.

(முஸ்னது அஹ்மது தொகுதி 4 பக்கம் 273)

## வாக்குறுதி அளிக்கப்பட்ட மற்றும் உறுதிமொழி வழங்கப்பட்ட ஸய்யிதுனா ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து

எவர் திருக்குர்ஆனின் எழுநூறு கட்டளைகளில் ஒரு சிறிய கட்டளையையாவது மீறுவாரோ அவர் தனது இரட்சிப்பின் வாசலைத் தனது கரங்களால் தன் மீதே அடைத்துக் கொள்கிறார் என்பதனை நான் உங்களுக்கு உண்மையாகவே கூறுகிறேன். உண்மையானதும் முழுமையானதுமான இரட்சிப்புக்குரிய வழிகளை திருக்குர்ஆனே நமக்குத் திறந்து தந்திருக்கிறது. எஞ்சியிருப்பவை அனைத்தும் அதன் நிழல்களாகும். ஆகவே நீங்கள் திருக்குர்ஆனை மிகவும் கருத்தூன்றிப் படியுங்கள். அதனை மிகவும் மேலாக நேசியுங்கள். வேறெதனோடும் வைக்காத பற்றை அதனோடு வையுங்கள். ஏனெனில் இறைவன் என்னை நோக்கி اَلْخَيْرُ كُلُّهٗ فِى الْقُرْاٰنِ என்று கூறியுள்ளான். அதாவது எல்லாவிதமான நன்மைகளும் திருக்குர்ஆனில் உள்ளன.

உண்மையும் இதுவேயாகும். திருக்குர்ஆனைக் காட்டிலும் மற்றவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கும் மக்களைக் குறித்து நான் பரிதாபம் கொள்கின்றேன். உங்களின் எல்லா விதமான வெற்றிக்கும் இரட்சிப்பிற்கும் ஆன ஊற்றின் உறைவிடம் திருக்குர்ஆனில் உள்ளது. திருக்குர்ஆனில் காணப்படாத உங்களது எந்த மார்க்கத் தேவையுமில்லை. இறுதி நாளில் உங்களது நம்பிக்கை பொய்யானதா? உண்மையானதா? எனப் பிரித்துக் காட்டக்கூடிய நூல் திருக்குர்ஆனேயாகும்.

திருக்குர்ஆன் மூலமாக அல்லாமல் உங்களுக்கு நேர்வழி காட்டக்கூடிய நூல் வானத்தின் கீழ் வேறொன்றும் இல்லை. திருக்குர்ஆனை உங்களுக்கு அருளியிருப்பதன் மூலம் மாபெரும் அருட்கொடையை இறைவன் உங்களுக்காக அளித்திருக்கின்றான். உங்களுக்காக அருளப்பட்டிருக்கின்ற இவ்வேதம் கிறிஸ்தவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தால் நிச்சயமாக அவர்கள் வழிதவறியிருக்க மாட்டார்கள். உங்களுக்கு அருளப்பட்ட இந்த அருட்கொடையும், நேர்வழியும் தவ்ராத்திற்கு பதிலாக யூதர்களுக்கு வழங்கப்பட்டிருந்தால் அவர்களில் சில பிரிவினர் இறுதி நாளை மறுத்திருக்கவே மாட்டார்கள் என்று நான் உண்மையாக கூறுகிறேன்.

எனவே உங்களுக்கு அருளப்பட்ட இந்த அருட்கொடைக்கு மதிப்பளியுங்கள். இது மிகவும் அன்பார்ந்த அருட்கொடையும் கிடைப்பதற்கரிய செல்வமும் ஆகும். திருக்குர்ஆன் அருளப்படாதிருந்தால் முழு உலகமும் அசுத்தமான இழிந்த பொருளாக ஆகியிருக்கும். திருக்குர்ஆன் எவ்வாறான சிறந்த நூல் என்றால் அதற்கு முன்னால் ஏனைய எல்லா வழிகாட்டல்களும் பொருளற்றவையாகும்.

(கிஷ்தி நூஹ், ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 26)

இந்த அரபு நாட்டைச் சார்ந்த முஹம்மது என்னும் பெயருடைய (ஆயிரமாயிரம் அருட்களும், சாந்தியும் அவர்களுக்கு உண்டாகட்டுமாக) அந்த நபி எவ்வளவு உயர்வான தகுதியினைக் கொண்ட நபியாவார்கள் என நான் எப்போதும் வியப்புடன் பார்க்கிறேன். அவருடைய உயரிய நிலையின் எல்லையைக் கண்டறிய முடியாது. அவருடைய தூய குணயியல்புகளின் தாக்கத்தை கணக்கிடுவது மனிதனின் வேலையன்று. பிரித்தறிய வேண்டிய முறையில் அவரின் உயர் பதவியினைப் பிரித்தறியப்படவில்லை என்பது வருந்தத்தக்கதே. உலகிலிருந்து மறைந்த அந்த ஓரிறைமையை (தவ்ஹீதை) மீண்டும் உலகிற்கு கொண்டு வந்தவர் அவ்வீரர் ஒருவரே.

அவர் இறைவனிடம் எல்லையற்ற அன்பைக் கொண்டிருந்தார். படைப்பினங்களிடம் கொண்டிருந்த எல்லையற்ற இரக்கத்தினால் அவரது உயிரே உருகி விட்டது. அதனால் தான் அவரின் உள்ளத்தின் இரகசியத்தை உணர்ந்த இறைவன் அவருக்கு எல்லா நபிமார்களை விடவும் – முன்னவர் பின்னவர் யாவரை விடவும் சிறப்பினை வழங்கினான். மேலும் அவரின் குறிக்கோள்களை அவரது வாழ்நாளிலேயே நிறைவேற்றினான். அவரே ஒவ்வொரு அருளின் தலையூற்று ஆவார். எந்த நபர் அவரிடமிருந்து அருளைப் பெறுவதை ஏற்றுக் கொள்ளாமல் தன்னிடம் ஒரு சிறப்பு இருப்பதாக வாதம் செய்கின்றாரோ அவர் மனிதரல்ல. மாறாக, அவர் ஷய்த்தானின் சந்ததியாவார்.

ஏனென்றால், ஒவ்வொரு சிறப்பான திறவுகோலும் அவருக்கே வழங்கப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு இறைஞானத்தின் கருவூலமும் அவருக்கே வழங்கப்பட்டிருக்கின்றது. எவர் அவர் மூலமாக எதையும் பெற்றுக் கொள்வதில்லையோ அவர் தொன்றுதொட்டே (அருள்களிலிருந்து) விலக்கப்பட்டுள்ளார். நாம் எம்மாத்திரம்? நமது உண்மை நிலை என்ன? உண்மையான தவ்ஹீதை நாம் இந்த நபியின் மூலமே பெற்றோம். உயிருள்ள இறைவனை அடையாளங்கண்டு கொள்வது, அந்த முழுமை பெற்ற நபியின் மூலமாகவும் அவரது ஒளியின் மூலமாகவும் நமக்கு கிடைத்தது. இறைவனுடன் உரையாடுகின்ற நற்பேறையும் – அதன் மூலமே நாம் அவனது முகத்தை பார்க்கின்றோம். (இந்த நற்பேறு) இந்த கண்ணியமிக்க நபியின் மூலமாகவே நமக்கு கிடைத்திருக்கின்றது. அந்த நேர்வழியின் சூரியனின் கதிர்கள் வெயிலைப் போன்று நம்மீது விழுகின்றது. அதற்கு முன்னால் நாம் நிற்கும் அந்த நேரம் வரையில்தான் நாம் ஒளிமிக்கவர்களாக இருக்க முடியும்.

(ஹகீகத்துல் வஹீ, ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 118)

நமது சொர்க்கம் நமது இறைவனே. நமது பேரின்பங்கள் நம் இறைவனிடத்தே உள்ளன. ஏனெனில் நாம் அவனைக் கண்டோம். அழகு அனைத்தும் அவனிடத்தே கண்டோம். இந்தச் செல்வம் உயிரைக் கொடுத்தாயினும் பெறத்தக்கது. ஒருவர் தன்னை முற்றிலும் இழந்தாகிலும் பெறத்தக்கது இம்மாணிக்கம். இழப்பிற்குரியோரே! இந்த நீரூற்றின் பக்கம் விரைந்து வாருங்கள். இது உங்கள் தாகத்தைத் தணிக்கும். இது உங்களைக் காக்கும் உயிர் ஊற்றாகும். நான் என்ன செய்வேன்? இந்த செய்தியை உள்ளங்களில் எவ்வாறு உறையச் செய்வேன்? இதுதான் உங்கள் இறைவன் என்று மக்கள் கேட்கும் பொருட்டு தெருக்களிலே எந்த முரசை அறைந்து தெரிவிப்பேன்? மக்கள் கேட்கும் பொருட்டு அவர்கள் காதுகள் திறக்க என்ன மருத்துவம் செய்வேன்? உண்மையிலேயே நீங்கள் இறைவனுக்குரியவர்களாக ஆகிவிட்டால், அந்த இறைவன் உங்களுக்கே உரியவன் என்பதை உறுதியாக உணர்ந்து கொள்ளுங்கள்.

(கிஷ்தி நூஹ், ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 30)

பூமியில் வசிக்கும் அனைத்து மக்களே! கிழக்கிலும், மேற்கிலும் வசிக்கின்ற அனைத்து மனித ஆன்மாக்களே! நான் உங்களை மிகவும் வலுவுடன் இதன் பக்கம் அழைக்கின்றேன். தற்போது பூமியில் உண்மையான மார்க்கம் இஸ்லாம் மட்டுமே ஆகும். மேலும் திருக்குர்ஆன் கூறியுள்ள இறைவனே உண்மையான இறைவன் ஆவான். நிரந்தரமாக ஆன்மீக வாழ்வு பெற்ற நபியும், கம்பீரம் மற்றும் பரிசுத்தத்தின் அரியணையில் அமரக்கூடியவரும் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களே ஆவார்கள். அவரது ஆன்மீக வாழ்க்கை மற்றும் பரிசுத்தமான கம்பீரத்திற்கு நமக்கு இந்த சான்று கிடைத்துள்ளது. அதாவது அவரைப் பின்பற்றுவதன் மூலமும் அவர் மீது அன்பு கொள்வதன் மூலமும் நமக்கு பரிசுத்த ஆவி மற்றும் இறை உரையாடல்கள் கிடைக்கின்றன. மேலும் விண்ணின் அடையாளங்களின் வெகுமதிகளையும் நாம் பெறுகின்றோம்.

(தர்யாகுல் குலூப், ரூஹானீ கஸாயின் தொகுதி 15 பக்கம் 11)

# இறையிருப்பு – துஆ ஏற்றுக் கொள்ளப்படுதலின் ஒளியில்

(மவ்லவி முஹம்மது கரீமுத்தீன் சாஹிப் ஷாஹித் – சதர், சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யா – காதியான்)

وَ اِذَا سَاَلَكَ عِبَادِیۡ عَنِّیۡ فَاِنِّیۡ قَرِیۡبٌ ؕ اُجِیۡبُ دَعۡوَۃَ الدَّاعِ اِذَا دَعَانِ ۙ فَلۡیَسۡتَجِیۡبُوۡا لِیۡ وَ لۡیُؤۡمِنُوۡا بِیۡ لَعَلَّہُمۡ یَرۡشُدُوۡنَ ﴿۱۸۷﴾

பொருள்: எனது அடியார் என்னைப் பற்றி உம்மிடம் கேட்டால் நான் நிச்சயமாக அருகில் இருக்கிறேன். துஆ செய்யக் கூடியவர் என்னை அழைக்கும்போது நான் அவருடைய துஆவை ஏற்றுக் கொள்கிறேன். எனவே அவர்களும் எனது கட்டளையினை ஏற்றுக் கொண்டு என்னிடம் நம்பிக்கை கொள்ள வேண்டும். இதனால் அவர்கள் நேர்வழி பெறுவார்கள்.

எனது சொற்பொழிவின் தலைப்பு இறையிருப்பு துஆ ஏற்றுக் கொள்ளப்படுதலின் ஒளியில் என்பதாகும். நான் ஆரம்பதில் அதிகாரம் அல்–பக்ராவின் வசனம் மற்றும் அதன் பொருளை ஓதினேன். அதில் அல்லாஹ் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களை நோக்கி, முஹம்மது (ஸல்) அவர்களே! எனது அடியார் என்னைப் பற்றியும் எனது இருப்பைப் பற்றியும் குறிப்பிட்டு இறையிருப்பிற்கான ஆதாரம் என்னவென்று உம்மிடம் வினவினால் நான் அவர்களுக்கு மிக அருகில் இருக்கிறேன் என்று நீர் அவர்களிடம் பதில் கூறுவீராக. அதற்கான அடையாளம் என்னவென்றால், அவர்கள் என்னை அழைக்கும்போது நான் அவர்களது துஆவை ஏற்றுக் கொள்கிறேன். அது நான் இருக்கின்றேன் என்பதற்கு ஆதாரம் ஆகும். மேலும் எனது இருப்பு வெறும் கற்பனையல்ல. மாறாக, ஓர் உயிருள்ள உண்மையாகும். இந்த அண்டத்தின் படைப்பாளன், எஜமானன் நானே ஆவேன். நானே இந்த அனைத்து உலகையும் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றேன் எனக் கூறுகிறான்.

ஆக இந்த வசனத்தில் 'தான்' வெறும் பெயரளவிலான அரசன் அல்ல. மேலும் தான் படைத்த சட்டங்களை எந்த வகையிலும் ஒருபோதும் மாற்ற முடியாத அதன் அடிமையுமல்ல என்பதை இறைவன் வெளிப்படுத்துகிறான். சந்தேகமின்றி அவன் தனது நடைமுறை மற்றும் வாக்குறுதிக்கு மாற்றமாக எதுவும் செய்வதில்லை. ஆனால் அவன் ஓர் உயிருள்ள மற்றும் செயல்பட்டுக் கொண்டிருக்கும் இறைவன் ஆவான். அவன் தனது அடியாரின் துஆக்களை கேட்கின்றான். மேலும் அதில் நிச்சய விளைவை ஏற்படுத்துகின்றான்.

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுநர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எவ்வளவு அழகாக கூறுகின்றார்கள்:

(இறைவா!) உலகில் உன்னை அழைத்தவர் எவராது துர்பாக்கியசாலியாக வீணாகியுள்ளாரா! பிறகு அவருக்கு எவ்வளவு உதவியாளனாக நீ இருந்தாய் என்றால் அவருக்கு அனைவரையும் விட நீயே பிரியமானவனாய் ஆகி விட்டாய்.

நான் உனது அருட்களை அறிவிக்கக் கூடியவனாவேன். எனது எதிரியை பிடிக்கக் கூடிய இறைவன் தூயவன் ஆவான்.

இஸ்லாம் துஆவின் விஷயங்களை விளக்கமாக எடுத்துரைத்து அதன் மீது குறிப்பான அழுத்தம் மட்டும் கொடுக்கவில்லை. மாறாக, முஸ்லிம்களுக்கு துஆ செய்வதற்கான பயிற்சி வழங்குவதற்காக மற்றும் துஆ செய்யக் கூடியவராக ஆக்குவதற்கு மனிதனுடைய ஒவ்வொரு செயலுடனும் ஏதாவது ஒரு துஆவை நிர்ணயித்து விட்டது. இதன் மூலம் அவனது எந்த நொடியும் இறை நினைவிலிருந்து காலியாக இருக்கக் கூடாது. இந்த பழக்கம் அவனுக்கு நமது ஓர் உயிருள்ள இறைவன் வல்லமை கொண்ட இறைவன் இருக்கின்றான். அவன் நமது துஆக்களை கேட்கின்றான். அதன் நல்ல மற்றும் சரியான தாக்கத்தை வெளிப்படுத்துகின்றான் என்பதை எப்போதும் நினைவூட்டிக் கொண்டிருக்க வேண்டும்.

இன்றைய இறுதி காலத்தின் இமாம் ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எவ்வளவு அழகாக கூறுகின்றார்கள்: துஆ ஒரு வீணான மற்றும் தேவையில்லாத செயல் என்று அறிவீனர்கள் கூறுகின்றனர். ஆனால் அவர்களுக்கு துஆ என்ற ஒன்று மட்டுமே போதும். இறைவன் தனது தோற்றத்தை வெளிப்படுத்தி விடுவான். மேலும் اَنَا الْقَادِر நான் வல்லமை படைத்தவன் என்ற இல்ஹாமை அவரது உள்ளத்தில் இடுவான் என்பது அவர்களுக்கு தெரியாது. நம்பிக்கையின் பசி மற்றும் தாகத்தை கொண்டிருக்கக் கூடிய ஒவ்வொருவரும் நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது இந்த வாழ்க்கையில் ஆன்மீக ஒளியினை தேடுபவருக்கு துஆ என்ற ஒரு வழி மட்டுமே உள்ளது. அது இறைவனுடைய இருப்பின் மீது நம்பிக்கை அளிக்கின்றது. மேலும் அனைத்து விதமான சந்தேகங்களையும் அகற்றி விடுகிறது.

(அய்யாமே சுலஹ், ரூஹானி கஸாயின் தொகுதி 14 பக்கம் 239)

அன்னார் மேலும் ஓரிடத்தல் கூறுகின்றார்கள்: சோதனையின் போதுதான் துஆக்களின் விநோதமான தன்மைகளும், தாக்கங்களும் வெளிப்படுகின்றன. உண்மை என்னவென்றால், நமது இறைவன் துஆக்களினால் அறியப்படுகின்றான்.

(மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 147 – காதியான் வெளியீடு 2003)

இதேபோன்று அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: இறைவன் திருக்குர்ஆனில் ஓரிடத்தில் தன்னை அறிவதற்கு இந்த அடையாளத்தை கூறுகின்றான். அதாவது உங்களது இறைவன் நிம்மதியற்றவர்களின் துஆவை கேட்கக் கூடிய இறைவன் ஆவான். அவன் கூறுகிறான்:

اَمَّنۡ یُّجِیۡبُ الۡمُضۡطَرَّ اِذَا دَعَاہُ இறைவன் தனது இருப்பிற்கு துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதை அடையாளமாக கூறியிருக்கும்போது துஆ செய்வதனால் ஏற்றுக் கொள்ளப்படுதலுக்கான வெளிப்படையான எவ்வித அடையாளமும் வெளிப்படுவதில்லை. அதில் எவ்வித ஆன்மீகமும் இல்லை என்று அறிவு படைத்த, வெட்கம் கொண்ட மனிதர் எப்படி கூற முடியும்? எனது சிந்தனையின்படி இப்படிப்பட்ட ஒழுக்கமற்ற செயலை உண்மையான நம்பிக்கை கொண்டுள்ள எவரும் செய்ய மாட்டார். வானம் மற்றும் பூமியின் படைப்பின் மீது கவனம் செலுத்துவதனால் உண்மையான இறைவனை எப்படி கண்டறிய முடியும் என்று அல்லாஹ் கூறுவதைப் போன்று துஆ ஒப்புக் கொள்ளப்படுவதை பார்க்கும்போது இறைவன் மீது நம்பிக்கை ஏற்படுகின்றது. (அய்யாமே சுலுஹ் பக்கம் 28,29)

வாசகர்களே! மத உலகின் வரலாற்றை பார்க்கும்போது இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்ட ஒவ்வொரு நபியும் துஆ ஒப்புக் கொள்ளப்படுதலின் மூலம் உயிருள்ள இறைவனின் இருப்பிற்கான சான்றை வழங்கியுள்ளார் என நமக்கு மிகத் தெளிவாக தெரிய வருகிறது. பல நபிமார்கள் மற்றும் அவர்களது பகைவர்களின் நிலையை திருக்குர்ஆன் எடுத்துரைத்து துஆ ஏற்றுக் கொள்ளப்படுதலின் பல சம்பவங்களை எடுத்துரைத்துள்ளது. ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்களின் துஆ மற்றும் இறைத்தொடர்பின் விளைவால்தான் அந்த காலத்தில் வழிகெட்ட மற்றும் ஆணவம் கொண்ட இப்லீஸின் தலைவனுக்கும், அவனது சீடர்களுக்கும் மிகத் தீய முடிவு ஏற்பட்டது. அவர்கள் இறை சன்னிதியிலிருந்து விரட்டப்பட்டார்கள்.

ஹஸ்ரத் நூஹ் (அலை) அவர்களின் சமுதாயம் அன்னாரை மறுத்து மிகவும் இழிவுபடுத்தி ஏளனப்படுத்தியது. அன்னார் (அலை) அவர்கள் رَّبِّ لَا تَذَرۡ عَلَی الۡاَرۡضِ مِنَ الۡکٰفِرِیۡنَ دَیَّارًا (அதாவது இறைவா! இப்படிப்பட்ட நன்றிகெட்ட துரதிஷ்டமான தீயவர்கள் மற்றும்

ஆணவம் கொண்டவர்களை உலகிலிருந்து அழித்து விடுவாயாக) எனத் துஆ செய்தார்கள். இதன் காரணமாக எப்படிப்பட்ட வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதென்றால் முழு ஊரும் அழிந்து போனது. ஆனால் ஹஸ்ரத் நூஹ் (அலை) அவர்களுடன் படகில் பயணம் செய்தவர்கள் மட்டும் உயிர் பிழைத்தார்கள்.

ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் துஆவின் காரணமாக தான் நம்ரூத் மூட்டிய நெருப்பு பூங்காவனமாக மாறியது. அன்னாரது துஆவின் அற்புதத்தால் தான் அன்னாரது வழித்தோன்றலில், ஒரு தலைமுறைக்குப் பிறகு அடுத்த தலைமுறை என எண்ணற்ற நபிமார்களை அல்லாஹ் அனுப்பினான். அதில் ஹஸ்ரத் மூஸா (அலை), ஹஸ்ரத் ஈஸா (அலை) மற்றும் கடைசியில் நமது அன்பிற்குரிய தலைவர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் காத்தமுன் நபிய்யீன் என்ற கிரீடத்தை தலையில் அணிந்தவாறு உலகில் தோன்றினார்கள். மேலும் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் துஆவின் அற்புதம் தான் அன்னாரது கையிலிருந்த சாதாரண தடி மாயவித்தைக்காரர்களின் வித்தைக்கு முன் பெரிய பாம்பாக மாறியது. மேலும் அது மாயவித்தைக்காரர்கள் நம்பிக்கை கொள்வதற்கு காரணமாக அமைந்தது.

ஃபிர்அவ்ன் தனது படையுடன் இஸ்ரவேலர்களை பின்தொடர்ந்தபோது அவரது சமுதாயம் பயந்துபோய் தன்னையும் அறியாமல் إِنَّا لَمُدْرَكُونَ மூஸாவே! நாம் இப்போது மாட்டிக் கொண்டோம் என்று கூறினர். ஆனால் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் துஆவை அல்லாஹ் ஏற்றுக் கொண்டான். மேலும் அன்னார் தனது சமுதாயத்திற்கு ஆறுதல் கூறியவாறு كَلَّا إِنَّ مَعِيَ رَبِّي سَيَهْدِينِ (அவ்வாறு ஒருபோதுமில்லை. எனது இறைவன் நிச்சயமாக என்னுடன் இருக்கின்றான். அவன் நமக்கு வெற்றிக்கான வழியினை காட்டுவான்) என்று கூறினார்கள். இறுதியில் என்ன நடந்தது? ஃபிர்அவ்ன் மற்றும் அவனது படை மூழ்கியது. மூஸா (அலை) அவர்களின் சமுதாயம் பாதுகாப்பாக கன்ஆன் சென்றடைந்தது.

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை யூதர்கள் பொய்யர் எனக் கூறி சிலுவையில் அறைந்து கொல்ல நினைத்தனர். இதன் மூலம் அவர் சாபத்திற்குரிய மரணம் அடைந்து பொய்யர் ஆக வேண்டும் என நினைத்தனர். ஆனால் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இரவில் கத்ஸ்மானேவின் தோட்டத்தில், என் இறைவா! இந்த ஆபத்திலிருந்து என்னை காப்பாற்று என அழுதழுது துஆ செய்தார்கள். மேலும் அன்னார் சிலுவையில் அறையப்பட்டபோது ஏலி ஏலி லிமா சபக்தானி அதாவது என் இறைவா! என்னை ஏன் கைவிட்டு விட்டாய் என மீண்டும் மீண்டும் துஆ செய்தார்கள். இந்த துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டதன் விளைவாக ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை அல்லாஹ் சிலுவையின் சாபத்திற்குரிய மரணத்திலிருந்து மட்டும் காப்பாற்றவில்லை. மாறாக, சிலுவையிலிருந்து அன்னார் உயிருடன் இறக்கப்பட்டார்கள். பிறகு காயங்களுக்கு சிகிச்சை பெற்ற பின்னர் அன்னார் ஜெருஷலேமிலிருந்து ஹிஜ்ரத் செய்து காஷ்மீர் வரை மிக நீண்ட பயணம் செய்தார்கள்.

சகோதரர்களே! இந்திய பூமியில் ஹஸ்ரத் மகாராஜ் ராம் சந்தர் ஜீ அவர்கள் வனவாசம் மற்றும் நாடு கடத்தல் காரணமாக ஏற்பட்ட வறுமை மற்றும் ஆதரவற்ற வாழ்விலும் துஆவின் விளைவாக அநியாயக்காரனான வல்லமை கொண்ட அரசனான ராவணனை அழித்து மேலும் ஸ்ரீலங்காவை வெற்றி கொண்டார்கள்.

மேலும் ஹஸ்ரத் கிருஷ்ணர் (அலை) அவர்களின் துஆவின் விளைவு இவ்வாறு இருந்தது. அதாவது அசுத்தமான, இழிவான அரசனான கம்ஸன், அன்னாருக்கு எதிரில் அழிந்து போனான். கௌரவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தும் கூட ஹஸ்ரத் கிருஷ்ணர் (அலை) அவர்களின் துஆ மற்றும் ஆலோசனையின் விளைவாக பாண்டவர்களுக்கு வெற்றி மட்டும் கிடைக்கவில்லை. மாறாக, பகவத் கீதை போன்ற ஒரு புனித நூல் உலகிற்கு கிடைத்தது.

இவர்கள் அனைவரையும் விட நமதுஅன்பிற்குரிய தலைவர் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் துஆவின் வடிவமாகவே திகழ்ந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்களின் துஆவின் விளைவாக அல்லாஹ் உலகில் ஒரு மகத்தான புரட்சியை ஏற்படுத்தினான். அதாவது கடுமையான எதிர்ப்புகள் இருந்தும், எதிரிகள் அன்னாரையும், அன்னாரை பின்பற்றுபவர்களையும் மேலும் இஸ்லாத்தையும் அழிப்பதற்கு கடுமையாக முயன்றும் சில வருடங்களிலேயே இஸ்லாம் அரபு நாட்டில் பரவியது. மாறாக, சிறிது சிறிதாக உலகில் இஸ்லாம் மேன்மையை பெற்றது.

இந்த மகத்தான புரட்சியைப் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: அந்த அரேபிய பாலைவனத்தில் ஓர் அற்புதம் நிகழ்ந்தது. இலட்சக்கணக்கில் இறந்தவர்கள் சில நாட்களிலேயே உயிர் பெற்றனர். தலைமுறை தலைமுறையாக சீர்கெட்டு போயிருந்தவர்கள் இறைபண்புகள் பெறலானார்கள். பார்வையிழந்தோர் கண் பார்வை பெற்றனர். ஊமைகளின் நாவிலிருந்து இறைஞானம் வெளிப்பட்டது. எக்கண்ணும் கண்டிராத, எக்காதும் கேட்டிராத அத்தகைய புரட்சி உலகில் மலர்ந்தது. அது என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? அது இறைவனில் தன்னை மாய்த்துக் கொண்ட ஒருவரின் இருள் நிறைந்த நேரங்களில் செய்திட்ட துஆக்களே ஆகும். அவை உலகில் ஒரு பேரொலியை ஏற்படுத்தின. மேலும் படிப்பறிவில்லாத சக்தியற்ற அம்மனிதரால் சாத்தியமற்றதாக தோன்றிய அதிசயங்களை அது செய்து காட்டின.

اللّٰھم صل وسلم و بارك علیه و اله بعدد ھمه و
غمه و حزنه لهذه الامة وانزل علیه انوار رحمتك الی الابد

மேலும் நான் எனது அனுபவத்திலும் பார்க்கிறேன். அதாவது துஆக்களின் தாக்கம் நெருப்பின் தாக்கத்தை விட அதிகமாகும். மாறாக, உலக காரியங்களில் துஆவைப் போன்று மாபெரும் விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய பொருள் வேறெதுவும் இல்லை.

(பரகாத்துத் துஆ, ரூஹானி கஸாயின் தொகுதி 6 பக்கம் 10)

சகோதரர்களே! அல்லாஹ் தனது இருப்பிற்கு சான்றாக தனது நபிமார்கள் மற்றும் ரஸூல்மார்களின் துஆக்களை அதிகமாக ஒப்புக் கொள்கின்றான். இந்த கட்டுரை எந்தளவு விசாலமானது என்றால் அனைத்து சம்பவங்களையும் எடுத்துரைப்பது கடலை கோப்பைக்குள் அடைத்து வைப்பதை போன்றதாகும். ஆகையால் ஈமானை வலுவூட்டக்கூடிய ஒரு சில சம்பவங்களை உதாரணமாக எடுத்துரைப்பது போதுமானதாகும் என கருதுகின்றேன்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தன்னை நபி என வாதம் செய்தபோது அன்னாரை உண்மையாளர், நம்பிக்கைக்குரியவர் என கண்ணியமாக கூறிய அதே சமுதாயம் அன்னாரை பொய்ப்படுத்த மட்டும் செய்யவில்லை. மாறாக, அன்னாருக்கும் அன்னனாரை ஏற்றுக் கொண்டவர்களுக்கும் மிகவும் கொடூரமான முறையில் கஷ்டங்களை கொடுத்தனர். அன்னாரை கொல்வதற்கு திட்டங்களை தீட்டினர். அன்னாரது பல தோழர்களை கொலை செய்தனர். அந்த மிருகத்தனமான காலத்தில் மக்காவைச் சேர்ந்த இரண்டு தலைவர்கள் மிகவும் அதிகமாக எதிர்ப்பில் முன்னிலை வகித்தனர். ஒருவன், அம்ர் பின் ஹஷ்ஷாம் (அபூஜஹில்) மற்றொருவர், உமர் பின் கத்தாப். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ்விடம், அல்லாஹ்வே! அம்ர் பின் ஹஷ்ஷாம் மற்றும் உமர் பின் கத்தாப் என்ற இந்த இரண்டு நபர்களில் (நீ விரும்பும்) ஒருவர் மூலமாக இஸ்லாத்திற்கு கண்ணியமும், ஆற்றலும் வழங்குவாயாக என துஆ செய்தார்கள்.

(திர்மிதி, கிதாபுல் மனாகிப், தொகுதி 18)

பிறகு அன்னாரது துஆவை எப்படி ஓர் அற்புதமான முறையில் அல்லாஹ் ஏற்றுக் கொண்டான் என்பதை உலகம் கண்டது. அதாவது வீட்டிலிருந்து பெருமானார் (ஸல்) அவர்களை கொலை செய்வதற்காக

வெளியேறிய உமர் அவர்கள், திருக்குர்ஆனின் மகத்துவமிக்க வழிகாட்டல் மற்றும் துஆ எனும் வாளினால் காயப்பட்டு முஸ்லிமானார்கள். இதன் மூலமாக முஸ்லிம்களுக்கு மிகப்பெரிய ஆறுதல் கிடைத்தது. மக்கத்து இணை வைப்பவர்கள் வாழ்வை கடினப்படுத்தியபோது பெருமானார் (ஸல்) அவர்கள் மற்றும் அன்னாரது தோழர்களுக்கு மக்காவை விட்டு மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்ய நேரிட்டது. ஆனால் ஹிஜ்ரத் செய்து ஓராண்டு தான் நிறைவடைந்தது. ஹிஜ்ரி 2 ஆம் ஆண்டு மக்கத்து இணை வைப்பவர்கள் முஸ்லிம்களை அழிக்க நினைத்தனர். அப்போது பத்ர் மைதானத்தில் நடைபெற்ற யுத்தத்தில் முஸ்லிம்களின் எண்ணிக்கை வெறும் 313 தான் இருந்தது. அவர்களில் பெரும்பாலாரிடம் ஆயுதமேயில்லாமல் இருந்தது. ஆனால் காஃபிர்களின் படை ஆயுதங்களை ஏந்திய ஆயிரம் பேர்களை கொண்ட படை வீரர்களை கொண்டிருந்தது. அந்த சமயத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் மிகவும் உருக்கத்துடன், இறைவா! நீ இந்த சிறிய ஏகத்துவ ஜமாஅத்தை அழித்து விட்டால் பிறகு உன்னை யார் வணங்குவார்? எனத் துஆ செய்தார்கள்.

(புகாரி, கிதாபுல் மகாஸி தொகுதி 4)

பத்ரின் கூடாரத்திலிருந்து செய்யப்பட்ட உருக்கம் நிறைந்த துஆ இறை சன்னிதானத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டதும் அவன் ஒரு பிடி மண்ணை புயல் காற்றாக மாற்றினான். 313 பேர் கொண்ட ஆயுதமில்லாத இஸ்லாமிய படை ஆயுதமேந்திய ஆயிரம் பேர் கொண்ட இணை வைப்பவர்களின் படையை வெற்றிக் கொண்டது.

சகோதரர்களே! உயிருள்ள இறைவனின் உயிருள்ள இருப்பிற்கான சம்பவம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையில் அந்த நேரத்திலும் வெளிப்பட்டது. அதாவது ஈரானின் மன்னன் இரண்டாவது கிஸ்ர் பர்வேஸ் யூதர்களின் தூண்டுதலுக்கேற்ப பெருமானார் (ஸல்) அவர்களை சிறை பிடிப்பதற்காக எமன் நாட்டு கவர்னருக்கு நபித்துவ வாதம் செய்யக் கூடிய முஹம்மது (ஸல்) அவர்களை பிடித்து என்னிடம் கொண்டு வாருங்கள் எனக் கட்டளையிட்டான். அவனது கட்டளைக்கேற்ப இரண்டு சிப்பாய்கள் அன்னாரை பிடித்து வருவதற்காக அனுப்பப்பட்டார்கள். அந்த தூதுவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்று இந்த செய்தியினை கூறி நீங்கள் கிஸ்ராவின் கட்டளையை மறுத்தீர்கள் என்றால் அவன் உங்களையும், உங்களது நாட்டையும் அழித்து விடுவான் என எச்சரிக்கையும் செய்தனர். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் நீங்கள் நாளை வந்து என்னை சந்தியுங்கள் என பதிலளித்தார்கள்.

இந்த வகையில் பெருமானார் (ஸல்) அவர்கள் இரவில் அல்லாஹ்விடம் துஆ செய்தார்கள். உம்மை கண்ணியக்குறைவாக நடத்திய கிஸ்ராவுக்கு தண்டனையாக நாம் அவனுடைய இடத்தில் அவனது மகனை அமர வைத்து விட்டோம் என மகத்துவமிக்க இறைவன் அன்னாருக்கு தெரிவித்தான். இந்த வகையில் காலையில் பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த இரண்டு தூதுவர்களிடம் நேற்றிரவு எனது இறைவன் உங்களது இறைவனை கொன்று விட்டான். நீங்கள் செல்லுங்கள் எனக் கூறினார்கள்.

எந்த இரவில் அல்லாஹ் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு ஈரானின் மன்னர் கிஸ்ரா இரண்டாவது குஸ்ர் பர்வேஸின் மரணம் தொடர்பாக அறிவித்தானோ அதே இரவில் அவனது மகன் ஷேர்வியா ஆங்கிலத்தில் லைரஸ் என்று கூறுவார்கள். கொலை செய்து அனான் அரசை தனது கையில் எடுத்துக் கொண்டான். மேலும் எமன் நாட்டு கவர்னருக்கு நபித்துவ வாதம் புரிந்த நபரை கைது செய்ய எனது தந்தை பிறப்பித்த கட்டளையை நான் ரத்து செய்கிறேன் என கட்டளையிட்டான். சுப்ஹானால்லாஹ்.

இந்த செய்தியைக் கேட்ட எமன் நாட்டு கவர்னர் மட்டும் வெளிப்படையாக இஸ்லாத்தை ஏற்கவில்லை. மாறாக ஈரான் நாட்டு மக்களும் இஸ்லாத்தை எற்றுக் கொண்டனர்.

சகோதரர்களே! துஆ ஏற்றுக் கொள்ளப்படுதலுக்கான சம்பவங்கள் வெறும் கடந்த கால நிகழ்வுகள் அல்ல. மாறாக, அல்லாஹ் தனது உயிருள்ள இருப்பிற்கு சான்றாக நமது காலத்திலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பர் மற்றும் தொண்டர் ஸய்யிதுனா ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களை அனுப்பியுள்ளான்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: நமது உயிருள்ள, என்றென்றும் நிலைபெற்றிருக்கும் இறைவன் நம்மிடத்தில் மனிதர்கள் பேசுவதைப் போன்று பேசுகின்றான். நாம் ஒரு விஷயத்தை கேட்டால் அல்லது துஆ செய்தால் அவன் வல்லமை நிறைந்த வார்த்தைகளுடன் அதற்கு பதிலளிக்கின்றான். இந்த தொடர் ஆயிரம் முறை தொடர்ந்தாலும் அவன் பதிலளிக்க மறுக்க மாட்டான். அவன் தனது வார்தையில் அதிசயத்திலும் அதிசயமான விஷயங்களை வெளிப்படுத்துகின்றான். வழக்கத்திற்கு அப்பாற்பட்ட காட்சிகளை வெளிப்படுத்துகின்றான். எந்த அளவுக்கென்றால் யாரை இறைவன் என்றழைக்க வேண்டுமோ அவன் தான் என்று உறுதியை ஏற்படுத்தி விடுகிறான்.

(நஸீமே தஃவத், ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 448)

இறையிருப்பிற்கு ஆதரவாக அன்னார் தனது நூல் ஹகீகத்துல் வஹீயில் 208 அடையாளங்களை குறிப்பிட்டுள்ளார்கள். அவற்றில் இறையிருப்பிற்கு சாட்சியாக உள்ள மற்றும் துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான ஓர் அடையாளத்தை எடுத்துரைக்கின்றேன்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: தெற்கு ஹைதராபாதைச் சார்ந்த அப்துர் ரஹ்மான் அவர்களது மகன் அப்துல் கரீம் என்ற பெயர் கொண்ட நமது மதரஸாவில் பயிலும் மாணவன் ஒருவர் இருந்தார். அவரை வெறி நாய் கடித்து விட்டது. அவர் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். சில தினங்கள் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு காதியான் திரும்பி வந்தார். சில தினங்களுக்குப் பின்னர் வெறி நாய் கடித்த பிறகு ஏற்படும் அறிகுறிகள் தென்பட ஆரம்பித்தன. தண்ணீரைக் கண்டு பயம் ஏற்பட்டது. மிகவும் மோசமான நிலை ஏற்பட்டது. அப்போது அந்த ஏழை நபரின் நிலை குறித்து எனது உள்ளத்தில் நிம்மதியின்மை ஏற்பட்டது. மேலும் துஆ செய்வதற்கான ஒரு குறிப்பான கவனம் ஏற்பட்டது.

அந்த ஏழை சிறுவர் சில மணி நேரத்திற்குள் மரணித்து விடுவார் என்று அனைவரும் கருதினர். அந்த சிறுவர் விடுதியிலிருந்து வெளியேற்றப்பட்டு ஒரு தனி வீட்டில் மற்றவர்களிடமிருந்து விலக்கி எல்லா வகையிலும் பாதுகாப்பாக வைக்கப்பட்டு இருந்தார். மருத்துவமனையின் ஆங்கில மருத்துவர்களிடம் இந்த நிலைமையில் ஏதாவது சிகிச்சை அளிக்க முடியுமா? என தந்தி மூலம் கேட்கப்பட்டது. அதற்கு இந்த நிலையில் அவனுக்கு எந்த சிகிச்சையும் இல்லை என தந்தி வாயிலாக பதில் வந்தது. ஆனால் வெளியூரிலிருந்து வந்த அந்த ஏழை சிறுவருக்காக எனது உள்ளத்தில் அதிக கவனம் மற்றும் வேதனை ஏற்பட்டது. எனது நண்பர்களும் அவருக்காக துஆ செய்ய வலியுறுத்தினார்கள். ஏனென்றால் இந்த வெளியூரில் வாழும் நிலையில் அவர் கருணை காட்டப்பட தகுதியானவனாக இருந்தான். மேலும் அவர் மரணித்து விட்டால் அவரது மரணம் மிகப் பெரிய அளவில் எதிரிகளின் மகிழ்ச்சிக்கு காரணமாக அமைந்து விடுமோ என உள்ளத்தில் அச்சம் ஏற்பட்டது. அப்போது எனது உள்ளம் அதனால் கடுமையான வேதனைக்கும் நிம்மதியின்மைக்கும் ஆளானது. வழக்கத்திற்கு மாற்றமான கவனம் ஏற்பட்டது. அது எனது முயற்சியினால் உருவாகவில்லை. மாறாக அது இறைவனிடமிருந்து உருவானதாகும். மேலும் அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டு விட்டால் பிறகு அது இறைவனது கட்டளையினால் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. அதாவது மரணித்தவர் உயிர் பெறுவதாகும். ஆக இதற்காக அல்லாஹ்வால் ஏற்றுற் கொள்ளப்பட்டவரின் நிலை ஏற்பட்டது. மேலும் அந்த கவனம்

உச்சத்தை அடைந்ததும் அதன் வேதனை தனது முழு ஆதிக்கத்தையும் எனது உள்ளத்தின் மீது ஏற்படுத்தியது. அப்போது மரணித்தவரைப் போன்று செய்திருந்த அந்த நோய் இந்த கவனத்தினால் (நல்ல) அறிகுறிகளை வெளிப்படுத்த ஆரம்பித்தது.

மேலும் அவர் தண்ணீரை கண்டு பயந்து கொண்டிருந்தார். வெளிச்சத்தைக் கண்டு ஓடிக் கொண்டிருந்தார். ஆனால் திடீரென்று உடல் ஆரோக்கியத்தின் பக்கம் திரும்பியது. அவர் தற்போது எனக்கு தண்ணீரை கண்டு பயமில்லை என்று கூறினார். அப்போது அவருக்கு தண்ணீர் கொடுக்கப்பட்டது. அவர் அதனை எவ்வித அச்சமுமின்றி குடித்தார். எந்த அளவுக்கென்றால் தண்ணீரைக் கொண்டு வுளூ செய்தார். மேலும் இரவு முழுவதும் உறங்கினார். அவரிடம் ஏற்பட்டிருந்த பயங்கரமான மிருகத்தனமான நிலை மாறிக் கொண்டே சென்றது. எந்த அளவுக்கென்றால் சில நாட்களிலேயே முழுமையாக உடல் நலம் பெற்றார். அப்போது எனது உள்ளத்தில் இந்த எண்ணம் இடப்பட்டது. அதாவது அவரிடம் ஏற்பட்டிருந்த பைத்தியக்கார நிலை அவரை அழித்து விட வேண்டும் என்பதற்காக ஏற்படவில்லை. மாறாக, இறைவனது அடையாளம் வெளிப்பட வேண்டும் என்பதற்காக ஏற்படுத்தப்பட்டது. உலகில் ஒருவரை வெறி நாய் கடித்து அவரிடம் பைத்தியத்திற்கான அறிகுறிகள் வெளிப்பட்ட பிறகு உயிர் பிழைத்ததாக பார்த்ததில்லை என அனுபவசாலிகள் கூறுகிறார்கள்.

(ஹகீகத்துல் வஹீ ரூஹானி கஸாயின் தொகுதி 22 பக்கம் 480)

சகோதரர்களே! இன்றைய நாட்களில் மருத்துவம் எல்லையற்ற உச்சத்தை அடைந்துள்ளது. பல மருந்தில்லா நோய்களுக்கு மருந்துகளை கண்டறிந்துள்ளார்கள். ஆனால் வெறி நாய் கடித்த பின்னர் இன்றைய நாட்களில் இடப்படும் Anti Rabbies ஊசியினால் நோய் சரியாகி விடுகிறது. ஆனால் மீண்டும் பைத்தியம் பிடிக்கும்போது அதற்கு எந்த மருத்துவமும் இல்லை என்பது ஓர் உண்மையாகும். மேலும் இந்த அடையாளம் அல்லாஹ்வின் வல்லமையின் வெளிப்பாடாகும். மேலும் அவனது இருப்பிற்கு உயிருள்ள அடையாளமாகும்.

சகோதரர்களே! ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்குப் பிறகு அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தில் நபித்துவ வழியிலான கிலாஃபத் மலர்ந்தது. அஹ்மதிய்யத்தின் கலீஃபாக்கள் மூலமாகவும் அல்லாஹ் துஆ ஏற்றுக் கொள்வதன் வாயிலாக தனது இருப்பிற்கு சான்றை வழங்கிக் கொண்டே செல்கின்றான். நேரத்தின் அருமையைக் கருதி ஒரு சில சம்பவங்களை எடுத்துரைக்கின்றேன்.

முதல் கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மவ்லானா நூருத்தீன் (ரலி) அவர்கள் காலத்தில் நடைபெற்ற சம்பவம். ஹஸ்ரத் சவுத்ரி ஹாக்கிமுத்தீன் சாஹிப் காதியானிலுள்ள தங்கும் விடுதியில் சாதாரண பணியாளராக இருந்தார். அவரது முதல் குழந்தையின் பிரசவத்தின் சமயத்தில் அவரது மனைவிக்கு வேதனை மிகவும் அதிகமானது. அவர் கூறுகின்றார்: இந்த நிலைமையில் வேறெந்த வழியும் தெரியாமல் இரவு 11 மணிக்கு ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் வீட்டிற்கு சென்றேன். காவலாளியிடம் நான் இப்போது ஹுஸூரை சந்திக்க முடியுமா? என்று கேட்டேன். காவலாளி எதிர்மறையாக பதில் அளித்தார். ஆனால் ஹுஸூர் எனது குரலை கேட்டு விட்டார்கள். என்னை உள்ளே அழைத்தார்கள். நான் உள்ளே சென்று மனைவியின் நிலையை எடுத்துரைத்தேன். அன்னார் பேரீத்தம் பழத்தில் துஆ செய்து என்னிடம் கொடுத்தார்கள். மேலும் இதனை எனது மனைவிக்கு கொடுக்குமாறும், குழந்தை பிறந்தவுடன் தனக்கு தெரிவிக்குமாறும் கூறினார்கள்.

ஹஸ்ரத் ஹாக்கிமுத்தீன் சாஹிப் கூறுகிறார்கள்: நான் அந்த பேரீச்சம் பழத்தை எனது மனைவிக்கு கொடுத்தேன். அந்த பேரீச்சம் பழம் மிகவும் ஆச்சரியமூட்டும் வகையில் அற்புதத்தை வெளிப்படுத்தியது. சிறிது நேரத்திலேயே பெண் குழந்தை பிறந்தது.

அவர் கூறுகின்றார்: ஹுஸூர் அவர்கள் தற்போது உறங்கிக் கொண்டிருப்பார்கள். நான் இரவில் அவர்களை எழுப்புவதை சரியானதாக கருதவில்லை. ஆகையால் காலையில் ஃபஜர் நேரத்திற்குப் பிறகு நான் அன்னாரிடம் சென்றேன். மேலும் அனைத்து நிலைமைகளையும் எடுத்துக் கூறினேன். அப்போது ஹுஸூர் அவர்கள் குழந்தை பிறந்தவுடன் கணவன் மனைவியாக நீங்கள் இருவரும் நிம்மதியாக உறங்கினீர்கள். எனக்கும் தகவல் தெரிவித்திருந்தால் நானும் ஓய்வெடுத்திருப்பேன். முழு இரவும் உங்களது மனைவிக்காக துஆ செய்து கொண்டள்ளவா இருந்தேன் என்றார்கள்.

இந்த சம்பவத்தை கூறும்போது ஹாகிமுத்தீன் சாஹிப் தன்னை கட்டுப்படுத்த முடியாமல் அழத் தொடங்கினார்கள். மேலும் மகத்தான நூருத்துன் எங்கே! இந்த காவலாளி ஹாகிமுத்தீன் எங்கே! என்று கூறினார். (அல்ஃபஸ்ல் துஆ பக்கம் 43)

ஆக இதுதான் அஹ்மதிய்யா கலீஃபாக்களின் மேன்மை ஆகும். தனது ஜமாஅத் சகோதரர்களுடன் எந்தளவு அன்பும் கருணையும் கொண்டுள்ளனர் என்றால் அவர்களது கஷ்டங்களை தனது உள்ளத்தில் கொண்டவாறு இரவு முழுவதும் துடி துடித்தவாறு அவர்களது நலனுக்காக துஆ செய்கின்றார்கள். இதே உணர்வை வெளிப்படுத்தியவாறு ஒரு முறை ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஜமாஅத்தினரை நோக்கி கூறினார்கள்:

உங்களுக்காக உங்கள் மீது அனுதாபம் கொள்ளக் கூடிய, உங்கள் மீது அன்பு செலுத்தக் கூடிய, உங்கள் கஷ்டங்களை தனது கஷ்டமாக கருதக் கூடிய, உங்களுடைய துன்பங்களை தனது துன்பமாக உணரக் கூடிய ஒருவர் இருக்கிறார். அவர் உங்களுக்காக இறைவனிடத்தில் துஆக்கள் செய்யக் கூடியவர். அவர் உங்களுக்காக தனது இறைவனிடத்தில் துடித்துக் கொண்டிருக்கிறார்.

ஹஸ்ரத் ஸய்யிதுனா மெஹர் ஆப்பா அவர்கள் கூறுகின்றார்கள்: 1953 ஆம் ஆண்டு குழப்பங்களின் காலத்தில் அஹ்மதிய்யத்தின் மீது கொண்ட பகைமையின் காரணமாக ஹஸ்ரத் மியான் நாஸிர் அஹ்மது (மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ்) மற்றும் ஹஸ்ருத் மிர்ஸா ஷரீஃப் அஹ்மது சாயிப் (ரலி) அவர்கள் கைது செய்யப்பட்டார்கள். இரவில் உணவு உண்ணும் நேரத்தில் அவர்களைப் பற்றி பேச்சு நடைபெற்றது. அப்போது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள்: அவர்கள் மீது அல்லாஹ் கருணை காட்டுவானாக. அவர்கள் இந்த காரணத்தினால் தான் பிடிக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் தவறு ஏதும் செய்யவில்லை. ஆகையால் எனக்கு இறைவன் மீது முழுமையான நம்பிக்கை உள்ளது. அவன் விரைவில் அவர்கள் மீது கருணை காட்டுவான்.

அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: இஷா தொழுகைக்காக அன்னார் (ரலி) எழுந்து நின்றார்கள். துஆவில் எந்த அளவு நிம்மதியின்மையும், அழுகையும் மன்றாடலும் இருந்ததென்றால் அதனை என்னால் மறக்க முடியாது. இதே நிலைமை தான் தஹஜ்ஜுத் தொழுகையிலும் இருந்தது. இவ்வாறு விடிந்ததும் தபாலுக்கான நேரம் வந்தபோது முதல் தந்தி இந்த நற்செய்தியை கொண்டதாக இருந்தது. அதாவது ஹஸ்ரத் மிர்ஸா ஷரீஃப் அஹ்மது சாஹிப் மற்றும் மியான் நாஸிர் அஹ்மது சாஹிப் அவர்கள் விடுதலை ஆகி விட்டார்கள். அப்போது, எவ்வளவு சீக்கிரம் எனது இறைவன் எனக்கு துஆ ஏற்றுக் கொள்ளப்படுதலுக்கான அற்புதத்தை காட்டி விட்டான் என்று ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

(ரோஸ் நாமா அல்ஃபஸல் துஆ நம்பர் பக்கம் 43)

ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் காலத்தில் நடைபெற்ற சம்பவம். முஹம்மது அமீன் காலித் சாஹிப் ஜெர்மனியிலிருந்து கூறுகின்றார்கள்: இன்றிலிருந்து 45 வருடத்திற்கு முன்பு எனது மார்பு எழும்பில் வலி ஏற்பட்டது. பல்வேறு மருத்துவர்களிடம் சிகிச்சை பெற்றேன். பல்வேறு வகையான பரிசோதனைகள் செய்து பார்த்தேன். ஆனால் வலியில் எவ்வித

மாற்றமும் ஏற்படவில்லை. மருத்துவர்களும் சோர்ந்து விட்டனர். உங்களுக்கு மருத்துவமே இல்லை எனக் கூறி விட்டனர். மேலும் எஞ்சியிருக்கக் கூடிய நாட்களை இதே கஷ்டத்துடன் கழித்து விடுங்கள் என்றனர். அன்றைய நாட்களில் 1980–ல் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் ஹம்பர்க் வந்திருந்தார்கள். அன்னாரை வரவேற்பதற்காக நான் வரிசையில் நின்று கொண்டிருந்தேன். முஸாஃபா செய்யும்போது நான் எனது கஷ்டத்தை அதாவது மருத்துவர்கள் இதற்கு மருத்துவம் இல்லை. எனக்கு இந்த கஷ்டத்திலிருந்து மோட்சம் கிடைக்காது என்று கூறி விட்டார்கள் என்பதை ஹுஸூர் அவர்களிடம் கூறினேன்.

அதற்கு ஹுஸூர் அவர்கள், மிகவும் கம்பீரத்துடன் உங்களுக்கு நிவாரணம் கிடைக்காது என்று யார் கூறினார்? பிறகு ஹுஸூர் அவர்கள், எனது மேலாடையின் ஒரு பெத்தானை தனது கரங்களால் திறந்தார்கள். எனது நெஞ்சில் ஒரு வட்டம் இட்டார்கள். மேலும் இந்த இடத்திலா வலியுள்ளது? நான் துஆ செய்கிறேன். இன்ஷா அல்லாஹ் விரைவில் நிவாரணம் கிடைத்து விடும். பயப்படாதீர்கள் என்று கூறினார்கள்.

அமீன் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: இன்றிலிருந்து இந்த சம்பவம் நடைபெற்று 35 ஆண்டுகள் கழிந்து விட்டன. அன்றைய தினத்திலிருந்து இன்று வரை என்னுடைய நிலை என்னவென்றால் அந்த வலி எனக்கு ஏற்படவேயில்லை என்பதைப் போன்று உள்ளது.

இறைவன் வல்லமையின் மூலம் தனது இருப்பிற்கு உண்மையான ஆதாரத்தை வழங்குகின்றான். அந்த அடையாளமற்றவனின் முகத்தின் வெளிப்பாடு இதுவேயாகும்.

சகோதரர்களே! ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் துஆ ஏற்றுக் கொள்ளப்பட்ட ஈமானை வலுவூட்டக் கூடிய சம்பவம். மேற்கு ஆஃப்ரிக்காவின் நகரில் கானாவில் மேலதிகாரி நானா ஓஜீஃபோ என்ற கிறித்தவர் இருந்தார். அவர்கள் கற்பனை கொள்கை கொண்ட காஹன் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். அவரது மனைவிக்கு ஒவ்வொருமுறையும் கர்ப்பம் கலைந்து போய்க் கொண்டிருந்தது. அவர்கள் கிறிஸ்தவ பாதிரிகளிடமும், ஓதி ஊதக் கூடியவர்களிடமும் சென்றுள்ளார். ஆனாலும் எந்த பயனுமில்லை. இவ்வாறு எல்லா பக்கத்திலிருந்தும் அவநம்பிக்கை அடைந்து கடைசியில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அப்துல் வஹ்ஹாப் சாஹிடம் வந்தார். மேலும் நான் கிறிஸ்தவனாக இருக்கின்றேன். ஆனால் எனக்கு கிறிஸ்துவத்தில் துஆக்கான நம்பிக்கை போய் விட்டது. இறைவன் உங்களது துஆவை ஏற்பதாக நான் கேள்விப்பட்டேன். நீங்கள் உங்களது இமாமிற்கு என் சார்பாக எனது அனைத்து நிலைமைகளையும் எடுத்துரைத்து எங்களுக்காக துஆ செய்வதற்காக எழுதுங்கள் என்று கூறினார்.

இந்த வகையில் அப்துல் வஹ்ஹாப் சாஹிப் அவர்கள் அவரது கடிதத்தை ஹுஸூர் அவர்களுக்கு அனுப்பி வைத்தார்கள். அவருக்கு குழந்தை கிடைக்கும். மிகவும் அழகான நீண்ட நாள் வாழக் கூடிய குழந்தை கிடைக்கும் என்று ஹுஸூர் அவர்கள் பதில் எழுதியிருந்தார்கள்.

இவ்வாறு அவரது மனைவி கர்ப்பம் தரித்தார். ஆனால் குழந்தை மட்டும் மரணிக்காது. மாறாக, தாயையும் சேர்த்துக் கொண்டு செல்லும். ஆகையால் இந்த கருவை கலைத்து விடுங்கள் என்று மருத்துவர்கள் கூறினர்.

அந்த மேலதிகாரி கூறினார்: அவ்வாறு ஒருபோதும் செய்ய மாட்டேன். எனக்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்களின் கடிதம் வந்துள்ளது. எனது மனைவிக்கும் எந்தப் பிரச்சனையும் ஏற்படாது. எனது குழந்தைக்கும் எந்தப் பிரச்சனையும் வராது. இந்த வகையில் அல்லாஹ் அவர்களுக்கு மிகவும் அழகான ஆரோக்கியமான குழந்தையை வழங்கினான். அவரது மனைவியும் நலமுடன் இருந்தார். துஆ ஏற்றுக் கொள்ளப்பட்தற்கான இந்த அடையாளத்தைப் பார்த்து அவர்கள் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் கரங்களில் பைஅத் செய்தார்கள்.

துஆ சாத்தியமில்லாததை சாத்தியமாக மாற்றி விடும். எனது தத்துவவாதிகளே! துஆவின் ஆற்றலை கொஞ்சம் பாருங்களேன்!

இறுதியாக நான் நமது அன்பிற்குரிய இமாம் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் துஆ ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு சம்பவத்தை எடுத்துரைக்கின்றேன்.

ஹுஸூர் அவர்கள் 2004 ஆம் ஆண்டு கானா சென்றார்கள். அங்கு ஒரு சந்தர்ப்பத்தில் பயணத்தின்போது அன்னார் கானாவின் பூமியிலிருந்து எண்ணெய் கிடைக்கும் என நற்செய்தியை கூறினார்கள். இந்த வகையில் 2008 ஆம் ஆண்டு கிலாஃபத் நூற்றாண்டின்போது மீண்டும் கானா சென்றார்கள். அப்போது கானா நாட்டின் தலைவருடன் நடைபெற்ற சந்திப்பின்போது ஹுஸூர் அவர்களிடம், ஹுஸூர் அவர்கள் எங்கள் நாட்டிற்காக செய்த துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகிறது என்று அவர் கூறினார். ஹுஸூர் அவர்கள் தமது முந்தைய சுற்றுப் பயணத்தின்போது கானாவின் நிலத்தில் எண்ணெய் உள்ளது. இங்கிருந்து எண்ணெய் வெளியாகும் எனக் கூறினார்கள். ஹுஸூர் அவர்களின் இந்த துஆ மகத்தான முறையில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

கடந்த வருடம் கானாவிலிருந்து எண்ணெய் வெளியாகியது. இந்த வகையில் இது தொடர்பாக கானாவின் பிரசித்தி பெற்ற தேசிய பத்திரிகை Daily Graphic தனது ஏப்ரல் 17, 2008 ஆம் ஆண்டு வெளியீட்டின் முதல் பக்கத்தில் ஹுஸூர் அவர்கள் மற்றும் கானா நாட்டு தலைவரின் சந்திப்பு தொடர்பான அறிக்கையை வெளியிட்டபோது கலீஃபத்துல மஸீஹ் அவர்கள் தனது 2004 ஆம் ஆண்டு கானாவின் சுற்றுப் பயணத்தின் போது கானாவில் எண்ணெய் இருப்பது தொடர்பாக மிகவும் உறுதியுடன் தனது நம்பிக்கையை வெளிப்படுத்தியிருந்தார்கள். அந்த நம்பிக்கை கடந்த வருடம் உண்மையாக மாறி விட்டது. கானாவின் பூமியிலிருந்து எண்ணெய் வெளியானது என்ற செய்தியை வெளியிட்டது.

(அல் ஃபஸல் துஆ நம்பர் 28 டிசம்பர் 2015)

சகோதரர்களே! கொடுக்கப்பட்ட நேரத்திற்கேற்ப துஆ ஏற்றுக் கெள்ளப்படுதலின் ஒரு சில சம்பவங்களை மட்டுமே நான் உதாரணமாக கூறியுள்ளேன். இல்லையென்றால் துஆ தொடர்பாக ஈமானை வலுவூட்டக் கூடிய எண்ணற்ற சம்பவங்கள் இருக்கின்றன. அவற்றை ஒன்றிணைத்தால் ஒரு பெரிய புத்தகமே உருவாகி விடும். துஆ ஏற்றுக் கொள்ளப்படுதல் உண்மையில் இறையிருப்பிற்கு வாயடைக்கக் கூடிய சான்றாகும். அதன் வெளிப்பாட்டிற்கு இறையச்சம், உளத்தூய்மை, எளிமை, பணிவு போன்றவைகள் அவசியமாகும்.

இது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எப்போது ஒருவர் அந்த பரிசுத்த இறைவனுடன் உள்ளத்தை இணைப்பாரோ, மேலும் தன்னையும் தூய்மையாக்குவாரோ அப்போது தான் அந்த இறைவனை அவர் அடைய முடியும். எவர் தன்னை மண்ணோடு மண்ணாக (எளியவராக) கருதுவாரோ அவருக்கு தான் புகழ் கிடைக்கும். சோதிக்கக் கூடியவர்களே இந்த மருந்தையும் சோதித்துப் பாருங்கள்.

மேலும் அன்னார் கூறுகின்றார்கள்: நாம் துஆவின் மூலமாக இறைவனிடமிருந்து முன்பாகவே அறிவை பெறுகின்றோம். மேலும் எந்தளவு உறுதி ஏற்படும் என்றால் நாம் எமது இறைவனை ஒருவகையில் பார்த்து விடுகிறோம். இந்த துஆ மூலமாகத் தான் இறைவன் அறியப்படுகின்றான். துஆ மூலமாகத் தான் ஆயிரக்கணக்கான திரைகளில் மறைந்திருக்கும் அந்த கம்பீரமிக்க இறைவனின் இருப்பு தெரிய வருகிறது.

(அய்யாமே சுலுஹ், ரூஹானி கஸாயின் தொகுதி 22 பக்கம் 238)

وَآخِرُ دَعْوَانَا أَنِ الْحَمْدُ لِلَّهِ رَبِّ الْعَالَمِينَ

(தமிழாக்கம்: மவ்லவி மவ்லவி ஜியாவுல் ஹக்)

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு – திருக்குர்ஆன் மீது அன்னார் கொண்டிருந்த அன்பு மற்றும் திருக்குர்ஆனுக்கு அன்னார் ஆற்றிய தொண்டு

அதா இலாஹி அஹ்ஸன் கோரி – நாஸிம் தஃமீராத் சதர் அஞ்ஜுமன் அஹ்மதிய்யா, காதியான்

மார்க்கங்களின் வரலாற்றில் 19 ஆம் நூற்றாண்டின் இரண்டாம் பகுதியும், 20 ஆம் நூற்றாண்டின் துவக்கமும் சிறப்பு முக்கியத்துவம் கொண்டுள்ளது. இது எப்படிப்பட்ட காலம் என்றால், அப்போது இந்தியாவில் ஒருபுறம் பெரும் பெரும் மார்க்கங்களுக்கு இடையில் மிகவும் மும்முரமான ஈடுபாட்டுடன் கொள்கை சண்டைகள் நடந்து வந்தன. மறுபுறம் ஞானங்களை உயிர்ப்பித்தல் மற்றும் புதிய பண்பாடுகளின் விளைவாக மத ரீதியான மற்றும் மதம் சாராத கண்ணோட்டங்கள் மிகவும் கடுமையான முறையில் இழப்பை ஏற்படுத்த ஆயத்தமாக இருந்தன.

ஒரு புறம் கிறிஸ்தவம், பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம் ஆகியவை இஸ்லாத்தின் மீது திடீர் தாக்குதல் தொடுத்துக் கொண்டிருந்தன என்றால், மறுபுறம் முஸ்லிம்களின் நிலை இவ்வாறு இருந்தது. அதாவது அவர்களின் பெரும்பாலான அறிஞர்கள் அந்த வெளி ஆபத்துக்களைப் பற்றி எந்தக் கவலையும் கொள்ளவில்லை. அவர்கள் (இஸ்லாத்திற்கு) உள்ளிருக்கும் பிரிவுச் சண்டைகளையே ஈடேற்றத்திற்கு காரணமாகக் கருதி இருந்தனர். இஸ்லாத்தின் நான்கு சுவற்றுக்குள்ளேயே உள் அலைகள் தங்களுக்குள் மோதி மோதி நுரை வருவதன் பெயர் தான் அவர்களின் பார்வையில் ஜிஹாத் ஆகும்.

தங்களுக்குள் சண்டையிடுவதிலேயே மூழ்கியிருந்த இந்தக் கூட்டம் போக, எப்படிப்பட்ட ஓர் அறிஞர் கூட்டமும் இருந்ததென்றால், அவர்கள் நிக்காஹ் மற்றும் ஃபாத்திஹா ஓதும்போது வழங்கப்படும் இனிப்புகள், யூஸுஃப், சுலைஹா மற்றும் சபா அரசி கதைகள் மற்றும் ஜின்களைக் கட்டுப்படுத்துகிறோம் என்று வாதம் புரிவது ஆகியவற்றைக் கொண்டு கிராம சூழல்களை வண்ணமயமாக்கிக் கொண்டிருந்தார்கள். இஸ்லாம் மற்றும் திருக்குர்ஆன் மீது என்ன நிகழ்ந்து கொண்டிருந்தது! நமது எஜமானரும் அன்பருமான ஹஸ்ரத் முஹம்மது அரபி (ஸல்) அவர்கள் மீது எப்படிப்பட்ட அநீதியிழைக்கக் கூடிய மற்றும் முட்டாள்தனமான தாக்குதல் நடத்தப்பட்டு வந்தன! இந்த விஷயங்களைப் பற்றி எல்லாம் எந்த ஜின்களை கட்டுப்படுத்தும் கற்பனையில் அவர்கள் எந்நேரமும் மூழ்கியிருந்தார்களோ அந்த ஜின்கள் கூடத் தெரிந்திருக்கவில்லை.

இஸ்லாத்திற்காக கவலை கொள்ள வேண்டிய, வேதனைப்பட வேண்டிய மற்றும் நிம்மதியிழக்க வேண்டிய இந்தக் காலத்தில் தான் அஹ்மதிய்யத்தின் ஒளி உதயமானது. இந்தப் புனித பூமியான காதியானில் அந்த நேரத்தில் ஓர் உறுதி படைத்த மற்றும் மகத்துவமிக்க சீர்திருத்தவாதி பிறந்தார்கள்.

அன்னார் அந்த சிறிய மற்றும் அறிவு சாரற்ற சுற்றுச்சூழலில் வாழ்நாளின் நாற்பது வசந்த காலத்தை தமது பூர்வீக வீட்டின் ஒரு சிறிய அறை அல்லது ஒரு சிறிய பள்ளிவாசலின் ஒரு மூலையில் அமைதியாக ஆழ்ந்து சிந்தனை செய்வதிலும், நூல்களை வாசிப்பதிலும் கழித்தார்கள். இஸ்லாத்தின் அந்த ஒளிமிகுந்த முகம் – எந்த ஆன்மீக ஒளிவீச்சின் மூலம் 1300 ஆண்டுகளுக்கு முன்னர் ஓர் உலகமே பிரகாசம் அடைந்ததோ – இன்று அது புழுதி படிந்து மாசடைந்து இருக்கிறது என்பதை அன்னார் பார்த்தபோது, அன்னாரின் உள்ளத்தில் வேதனைகளின் உராய்வு ஏற்பட்டு ஏற்பட்டு அதற்கு வெளியே வழி தேட ஆரம்பித்தார்கள். ஆனால் அன்னார் வேதனையைக் கட்டுப்படுத்திக் கொண்டார்கள். இறுதியில் அந்த எல்லா வேதனைகளும் ஒன்று திரண்டு ஒரு திரவத்தின் வடிவத்தில் வந்து விட்டன. மேலும் அது காகிதங்களின் பக்கத்தில் சிதறி பராஹீனே அஹ்மதிய்யா என்ற வடிவத்தை மேற்கொண்டு விட்டது.

பராஹீனே அஹ்மதிய்யா என்றால் என்ன? அது இஸ்ராஃபீலின் ஓர் எக்காளம் ஆகும். அது மார்க்க உலகில் ஒரு பேரச்சத்தை ஏற்படுத்தி விட்டது. இந்தியாவின் மூலை முடுக்குகளில் காலகாலமாக கனவில் மூழ்கியிருந்த முஸ்லிம்கள் சோம்பல் முறித்து உறக்கத்திலிருந்து விழித்தெழுந்தனர். முஹம்மதிய தோட்டத்தில் ஒரு நயமான பூ மலர்ந்துள்ளது என்று கிசு கிசுக்கப்பட்டது. பராஹீனே அஹ்மதிய்யா வெளியிடப்பட்டபோது இஸ்லாமியர்கள் மகிழ்ச்சியையும் பெருநாளையும் கொண்டாடினார்கள். எல்லா புறமிருந்தும் பணிவான பரிசுகள் மற்றும் பற்றுறுதியின் அன்பளிப்புகள் வரத் தொடங்கின.

ஒருவர் எழுதுகிறார்: பராஹீனே அஹ்மதிய்யாவின் நூலாசிரியர் ஆற்றிய அளவு இஸ்லாத்துக்கு இவ்வளவு பெரிய தொண்டைக் கடந்த 13 நூற்றாண்டுகளில் எவரும் ஆற்றியதில்லை.

இறைவனுக்காக! தாங்கள் நோய் தீர்ப்பவராக ஆவிடுங்கள் என்று ஒருவர் வேண்டினார். சுருக்கமாக கூறினால், திருக்குர்ஆனின் ஆதாரங்களை உள்ளடக்கிய இஸ்லாமிய கலைக்களஞ்சியமாகத் திகழ்ந்தது. இஸ்லாமியர்களின் அறிவார்ந்த வட்டாரங்களில் அதிகம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் இஸ்லாத்தின் எதிரிகளின் வீடுகளில் இழப்புத் துயரம் ஏற்பட்டது.

கண்ணியத்திற்குரியோரே! ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் இவ்வாறு முன்னறிவித்திருந்த அதே பாரஸீக ஆண் மகன் தான் அன்னார்!

لَوْ كَانَ الْإِيمَانُ عِنْدَ الثُّرَيَّا لَنَالَهُ رِجَالٌ أَوْ رَجُلٌ مِنْ هٰؤُلَاءِ

(புகாரி, கிதாபுத் தஃப்ஸீர் சூரா ஜுமுஆ மறும் முஸ்லிம்)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நபிமொழிகளில் இவ்வாறு வருகிறது. இறுதி காலத்தில் திருக்குர்ஆன் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டு விடும். திருக்குர்ஆனின் அறிவு மறைந்து விடும். அறிவீனம் பரவி விடும். ஈமானிய ஆர்வமும், இனிமையும் உள்ளங்களிலிருந்து தொலைவில் சென்று வடும். பிறகு, அந்த நபிமொழிகளில் இந்த ஒரு நபிமொழியும் வருகிறது. ஈமான் கார்த்திகை நட்சத்திரம் வரை சென்று விட்டாலும், அதாவது பூமியில் அதன் பெயர் அடையாளம் கூட எஞ்சியிருக்காது. அப்போது பாரஸீகர்களில் ஒரு நபர் தனது கரத்தை நீட்டுவார். கார்த்திகை நட்சத்திரத்திலிருந்து அதைக் கொண்டு வருவார். இப்போது, உங்களால் சுயமே புரிந்து கொள்ள முடியும்.

மற்ற நபிமொழிகளில் புகையுடன் ஒப்புமையாக கூறப்பட்டுள்ள அறிவீனம், நம்பிக்கையின்மை, வழிகேடு போன்றவை உலகில் பரவி விடும். பூமியில் உண்மையான நேர்மை எந்த அளவு குறைந்து விடும் என்றால், வானத்திற்குச் சென்று விட்டது போல் ஆகி விடும். இறைவன் தரப்பிலிருந்து உயர்த்தப்பட்டு விட்டதோ என்ற அளவு திருக்குர்ஆன் கைவிடப்பட்டதாக ஆகி விடும் என்பது இந்த நபிமொழியிலிருந்து தெளிவாகப் புலப்படுகிறது.

(இஸாலயே அவ்ஹாம், ரூஹானீ கஸாயின் தொகுதி 3 பக்கம் 455)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்: இந்த நிலை ஏற்படும்போது, பராஸீக வம்சத்தைச் சேர்ந்த ஒரு நபர் தோன்றுவார். அவர் மார்க்கத்தை மீண்டும் புதிதாகத் திரும்ப கொண்டு வருவார். மார்க்கத்தையும் திருக்குர்ஆனையும் மீண்டும் புத்தம் புதிதாக ஆக்குவார். திருக்குர்ஆனின் மறைந்து போன மகத்துவம், மறந்து போன நேர்வழி, கார்த்திகை நட்சத்திரம் வரை சென்று விட்ட ஈமான் ஆகியவற்றை மீண்டும் பூமியில் பரப்புவார்.

திருக்குர்ஆனுக்குத் தொண்டாற்றுபவர் என்ற வகையில், தமது வருகையின் நோக்கத்தை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

நான் புதைந்து கிடக்கும் அந்தக் கருவூலங்களை உலகிற்கு வெளிப்படுத்துவதற்காகவும் அந்த செழிப்பான இரத்தினங்கள் மீது வாரி இரைக்கப்பட்ட அசுத்தமான ஆட்சேபனைகள் எனும் சேற்றிலிருந்து அவற்றைத் தூய்மைப்படுத்துவதற்காகவும் இறைவன் என்னை அனுப்பினான். திருக்குர்ஆனின் கண்ணியத்தை ஒவ்வொரு அசுத்தமான பகைவனின் ஆட்சேபனை எனும் கறைகளிலிருந்து தூய்மைப்படுத்தி புனிதமாக்க வேண்டும் என்று இறைவலனின் தன்மானம் தற்போது மிகவும் உத்வேகம் கொண்டுள்ளது.

**(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 38 காதியான் பதிப்பு 2003)**

அல்லாஹ்விடமிருந்து வழங்கப்பட்ட திருக்குர்ஆனின் அழமான உண்மைகள் மற்றும் இறைஞானங்கள் மூலம் ஒருபுறம் அன்னார் இதர மார்க்கங்களின் கொள்கைகளான ஈஸா உயிரோடு இருக்கிறார் என்ற கொள்கை, முத்தெய்வக் கொள்கை, ஈஸா இறைவனின் மகனாவார் என்ற கொள்கை, ஈடேற்றக் கொள்கை, மறுஜென்மம், உயிர்களும் உடல்களும் தொன்று தொட்டே உள்ளன என்ற கொள்கை முதலியவற்றைத் தகர்த்தெறிந்த அதே வேளையில் முஸ்லிம்களின் தீய கொள்கைகளை சீர்திருத்தியவாறு ஈஸாவின் மரணம், நபித்துவம் தொடர்தல், நபிமார்களின் கண்ணியம், மஸீஹின் வருகை முதலிய விஷயங்களில் திருக்குர்ஆனின் சாட்சியங்களைக் கொண்டு ஒளியிட்டார்கள். மேலும் முஸ்லிம்களிடம் பரவியிருக்கும் தீய சம்பிரதாயங்களையும், திருக்குர்ஆனின் உண்மையான போதனைகளின் ஒளியில் நீதி நெறிதீர்ப்பவராக முடிவுக்குக் கொண்டு வந்தார்கள். அல்லாஹ் அன்னாருக்கு திருக்குர்ஆனின் நிழல் வடிவில் உன்னதமான வளம் கொண்ட அரபு மொழியைக் கற்றுக் கொடுத்தான். அதன் விளைவாக அன்னார் சுமார் 20 அரபு நூல்களை இயற்றியுள்ளார்கள். அவற்றில் இஃஜாஸுல் மஸீஹ் என்ற ஒரு நூலும் உள்ளது. அது சூரா ஃபாத்திஹாவின் விளக்கவுரையை உள்ளடக்கியது.

ஹுஸூர் (அலை) அவர்கள் இந்த விளக்கவுரையைக் குறித்து இறையறிவிப்புப் பெற்று இவ்வாறு எழுதுகிறார்கள்: எதிரி அறிஞர்கள், மதிநுட்பம் கொண்டவர்கள், மார்க்கச் சட்டம் கற்றவர்கள், அவர்களின் தந்தைமார்கள் மற்றும் மகன்கள் ஆகிய அனைவரும் ஒன்றுபட்டு இந்த விளக்கவுரைக்கு நிகர் கொண்டு வர நாடினாலும் அவர்களால் ஒருபோதும் கொண்டு வர முடியாது.

**(இஃஜாஸுல் மஸீஹ், ரூஹானீ கஸாயின் தொகுதி 18 பக்கம் 56)**

இந்த மகத்தான முன்னறிவிப்பிற்கேற்ப அரேபியர் மற்றும் அரபு அல்லாத நாடுகளைச் சேர்ந்த எந்தவொரு இலக்கியவாதிக்கும், மொழி வல்லுநருக்கும், இதற்கு நிகர் கொண்டு வருவதற்குத் துணிச்சல் வரவில்லை. அன்னார் 80ற்கும் மேற்பட்ட தமது நூல்களில் திருக்குர்ஆனின் எத்தகைய உண்மைகள், இறைஞானங்கள், வினோதங்கள் மற்றும் ஆழமான கருத்துக்களை எடுத்துரைத்துள்ளார்கள் என்றால், அவற்றிற்கு பிற விளக்கவுரைகளில் பெயர் அடையாளம் கூட கிடைப்பதில்லை.

அன்னார் கூறுகின்றார்கள்: நான் இதற்கு முன்னர் எழுதியுள்ளேன். திருக்குர்ஆனின் அற்புதங்கள் பெரும்பாலும் இறையறிவிப்புகள் மூலமாக எனக்கு வெளிப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. பெரும்பாலானவை எப்படிப்பட்டவை என்றால், விளக்கவுரைகளில் அவற்றின் பெயர் அடையாளம் கூடத் தென்படுவதில்லை. எடுத்துக்காட்டாக இந்த விஷயம் இந்த எளியவனுக்கு வெளிப்பட்டது. அதாவது ஆதம் படைக்கப்பட்டதிலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோன்றும் வரை எவ்வளவு காலம் கடந்ததோ அந்த அனைத்து கால அளவும் சூரா அல் அஸ்ர் உடைய எழுத்துக்களின் மதிப்பின் எண்ணிக்கையின்படி சந்திர ஆண்டின்படி கீழே கொடுக்கப்பட்ட வண்ணம் உள்ளது. அதாவது 4740. இப்போது கூறுங்கள். திருக்குர்ஆனின் அற்புதம் தெளிவாக வெளிப்பட்டுள்ள திருக்குர்ஆனின் இந்த ஆழமான அறிவு எந்த விளக்கவுரையில் எழுதப்பட்டுள்ளது.

**(இஸாலயே அவ்ஹாம், ரூஹானி கஸாயின் தொகுதி 3 பக்கம் 258)**

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகைக்கு முன்னர் முஸ்லிம்களிடம் திருக்குர்ஆன் தொடர்பாக இந்தக் கொள்கை காணப்பட்டது. அதாவது திருக்குர்ஆனின் சில வசனங்கள் நீக்கக் கூடியவை. சில நீக்கப்பட்டவை. நீக்கப்பட்ட வசனங்களின் எண்ணிக்கை அறிஞர்களின் பார்வையில் 500 ஆக இருந்தது. எவ்வாறாவது பொருத்தி, இந்த எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும் என்று அறிஞர்கள் முயற்சி செய்தார்கள்தான். மேலும் அவர்கள் தமது இந்தக் கொள்கையில் வெற்றியும் பெற்றனர். ஆனால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தோன்றும் வரையிலும் இந்தக் கொள்கை முழுமையான முறையில் தீர்வாக முடியாமல் இருந்தது. அறிஞர்களின் பார்வையில் 5 வசனங்கள் நீக்கப்பட்டவையாக இருந்தன. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வருகை தந்து இந்த விவகாரத்தை முழுமையாகத் தீர்த்து வைத்து விட்டார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: திருக்குர்ஆன் இறை வேதங்களில் சிறந்தது என்ற விஷயத்தை நாம் மிக உறுதியாக நம்புகிறோம். அந்த நூலின் ஒரு சுழியோ, புள்ளியோ, சட்டங்களோ, கட்டளைகளோ, ஆணைகளோ, போதனைகளோ கூடவோ, குறையவோ முடியாது. இனிமேல் திருக்குர்ஆனின் போதனைகளை மாற்றவோ, நீக்கவோ கூடிய அல்லது ஏதாவதொரு கட்டளையை மாற்றவோ, திருத்தவோ கூடிய எந்த இல்ஹாமோ, வஹியோ வர முடியாது. எவராவது அவ்வாறு நினைப்பாரென்றால் எம்மைப் பொறுத்தவரை அவர் நம்பிக்கையாளர்களின் கூட்டத்திலிருந்து வெளியேறியவரும், மார்க்கமிழந்தோரும், நிராகரிப்பவரும் ஆவார்.

**(இஸாலயே அவ்ஹாம் பாகம் 1 பக்கம் 170)**

இப்போது நான் உங்கள் முன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சில மேற்கோள்களை எடுத்து வைக்கிறேன். அவற்றின் மூலம் அன்னாருக்குத் திருக்குர்ஆன் மீதிருந்த நிகரற்ற நேசம் குறித்து தெரிய வருகிறது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் திருக்குர்ஆனின் ஒப்பற்ற பொருட் செறிவு மற்றும் வெளிப்படையான அழகு ஆகியவற்றைக் குறித்து கூறுகின்றார்கள்:

எவ்வாறு கண்களின்றி நம்மால் பார்க்க முடியாதோ அல்லது செவிகளின்றி கேட்க முடியாதோ அல்லது நாவின்றி பேச முடியாதோ அவ்வாறே திருக்குர்ஆன் இன்றி அந்த அன்பிற்குரிய இறைவனின் முகத்தை நம்மால் காண முடியாது என்பதை நிச்சயமாக தெரிந்து கொள்ளுங்கள். நான் இளைஞனாக இருந்தேன். இப்போது முதியவனாகி விட்டேன். ஆனால் திருக்குர்ஆன் என்ற இந்தத் தூய நீரூற்று இல்லாமல் அந்தத் தெளிவான இறைஞானத்தின் கோப்பையை அருந்தியவர் எவரையும் நான் காணப் பெறவில்லை.

**(இஸ்லாமி உஸூல் கி ஃபிலாஸஃபி, ரூஹானி கஸாயின் தொகுதி 10 பக்கம் 442)**

திருக்குர்ஆனை மிகவும் கருத்தூன்றி ஓதுவது, அதனை அதிகமாக நேசிப்பது மற்றும் அதன் அனைத்து கட்டளைகள்படியும் உடலாலும், உள்ளத்தாலும் செயல்படுவது தொடர்பாக அன்னார் தமது கிஷ்தி நூஹ் எனும் நூலில் இவ்வாறு கூறுகிறார்கள்: நான் உண்மையாகவே கூறுகிறேன். எவர் திருக்குர்ஆனின் 700 கட்டளைகளில் ஒரு சிறிய கட்டளையை கூட கைவிடுவாரோ அவர் இரட்சிப்பிற்குரிய வாசலைத் தன் கரங்களாலேயே அடைத்துக் கொள்கிறார். உண்மையானதும், முழுமையானதுமாகிய இரட்சிப்புக்குரிய வழிகளைத் திருக்குர்ஆனே திறந்து தந்திருக்கிறது. எஞ்சியிருப்பவை அனைத்தும் அதன் நிழல்களாக இருந்தன. ஆகவே நீங்கள் திருக்குர்ஆனை மிகவும் கருத்தூன்றி ஓதுங்கள். அதனை மிகவும் மேலாக நேசியுங்கள். யாரையும் நேசிக்காத அளவு அதை நேசியுங்கள். ஏனெனில் இறைவன் என்னை நோக்கி اَلْخَيْرُ كُلُّهٗ فِى الْقُرْاٰن என்று கூறியுள்ளான். அதாவது அனைத்து நன்மைகளும் திருக்குர்ஆனில் உள்ளன. உண்மையும் இதுவே.

திருக்குர்ஆனை விட மற்றவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கும் மக்களைக் குறித்து நான் பரிதாபம் கொள்கிறேன். உங்களின் எல்லா விதமான வெற்றிகளுக்கும், இரட்சிப்புகளுக்கும் ஊற்றின் உறைவிடம் திருக்குர்ஆனில் உள்ளது. திருக்குர்ஆனில் காணப்படாத உங்களது எந்த மார்க்கத் தேவையுமில்லை. இறுதி நாளில் உங்களது நம்பிக்கை பொய்யானதா, உண்மையானதா எனப் பிரித்துக் காட்டக் கூடிய நூல் திருக்குர்ஆன். திருக்குர்ஆன் மூலமாக அல்லாமல் உங்களுக்கு நேர்வழி காட்டக் கூடிய நூல் வானத்தின் கீழ் வேறொன்றும் இல்லை. திருக்குர்ஆனை உங்களுக்கு அருளியிருப்பதன் மூலம் மாபெரும் அருட்கொடையை இறைவன் உங்களுக்காக அருளியிருக்கின்றான்.

உங்களுக்கு ஓதிக் காட்டப்பட்ட இந்த மறை கிறிஸ்தவர்களுக்கு ஓதிக் காட்டப்பட்டிருந்தால் நிச்சயமாக அவர்கள் அழிவிற்குள்ளாகியிருககமாட்டார்கள். உங்களுக்கு அருளப்பட்ட இந்த அருட்கொடையும் நேர்வழியும் தவ்ராத்திற்கு பதிலாக யூதர்களுக்கு வழங்கப்பட்டிருந்தால் அவர்களில் சில பிரிவினர் மறுமை நாளை மறுத்திருக்க மாட்டார்கள் என்று நான் உண்மையாகவே கூறுகிறேன். எனவே உங்களுக்கு அருளப்பட்ட இந்த அருட்கொடைக்கு மதிப்பளியுங்கள். இது மிகவும் அன்பார்ந்த அருட்கொடையாகும். இது மாபெரும் செல்வம் ஆகும். திருக்குர்ஆன் அருளப்படாதிருந்தால் முழு உலகமும் அசுத்தமான இழிவடைந்த ஒரு பொருளாக ஆகியிருக்கும். திருக்குர்ஆனுக்கு முன் ஏனைய எல்லா வழிகாட்டல்களும் ஒன்றும் அற்றவையாகும்.

(கிஷ்தி நூஹ், ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 26,27)

அன்னார் (அலை) தாம் மட்டும் திருக்குர்ஆனை அதிகமாக ஓதி வரவில்லை. மாறாக, பிறரையும் திருக்குர்ஆனை மீண்டும் மீண்டும் ஓதிவரும்படியும் பிறருக்கு கற்றுக் கொடுக்கும் படியும், ஓதுவதைக் கேட்கும்படியும், பிறர் கேட்க ஓதிக்காட்டும் படியும் மிகவும் வலியுறுத்திக் கூறி வந்தார்கள் என்பது அன்னாரின் நூல்கள் மற்றும் மல்ஃபூஸாத்தை படிக்கும்போது தெரிய வருகிறது. ஒரு முறை ஹுஸூர்! திருக்குர்ஆனை எவ்வாறு ஓத வேண்டும்? என்று ஒருவர் கேட்டதற்கு அன்னார் (அலை) இவ்வாறு கூறினார்கள்:

திருக்குர்ஆனை மிகவும் கருத்தூன்றியும் கவனமாகவும் ஓத வேண்டும். ஹதீஸில் رُبَّ قَارِءٍ يَلْعَنُهُ الْقُرْآنُ அதாவது பல காரிகளைத் திருக்குர்ஆன் சபிக்கிறது என வந்துள்ளது. திருக்குர்ஆனை ஓதி அதன்படி செயல்படாமல் இருப்பவர் மீது திருக்குர்ஆன் சாபமிடுகிறது. திருக்குர்ஆன் ஓதுகையில் இறைவனின் கருணை குறித்த வசனங்கள் வந்தால் அங்கு இறைவனின் கருணையை வேண்ட வேண்டும். ஒரு சமுதாயத்தின் மீது தண்டனையை குறித்து வந்தால் அங்கு இறை தண்டனையிலிருந்து இறைவனிடம் பாதுகாப்புத் தேட வேண்டும். மிக கருத்தூன்றியும் கவனமாகவும் ஓத வேண்டும். அதன்படி செயல்பட வேண்டும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 157)

பிறகு கூறுகிறார்கள்: திருக்குர்ஆன் கவலை மிகுந்த நிலையில் இறங்கியது. ஆகவே நீங்களும் இதனை மிகுந்த கவலையுடன் ஓதுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 152)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட் மஸீஹ் (அலை) அவர்கள் தமது ஜமாஅத் மக்களுக்கு அதிகமாக திருக்குர்ஆன் கற்கவும், கற்பிக்கவும் வேண்டும் என்று வலியுறுத்தியவாறு கூறுகிறார்கள்: இப்போது எல்லா நூல்களையும் விட்டு விடுங்கள். இரவு பகலாக இறை மறையையே ஓதி வாருங்கள். திருக்குர்ஆனின் பக்கம் திரும்பாமல் பிற நூல்களின் பக்கமே இரவு பகலாக குனிந்து கிடக்கும் மனிதர் மிகவும் ஈமான் அற்ற நபர் ஆவார்.

நமது ஜமாஅத் உயிராலும் உள்ளத்தாலும் திருக்குர்ஆனை ஆராய்வதிலும், ஆழ்ந்து சிந்திப்பதிலும் ஈடுபட்டிருக்க வேண்டும். ஹதீஸ்களை ஆராய்வதை விட்டு விட வேண்டும். ஹதீஸ்கள் கற்பிக்கப்படுவதைப் போன்று திருக்குர்ஆன் கற்பிக்கப்படுவதில்லை என்பது மிகவும் வருத்தத்திற்குரிய நிலையாகும். இப்போது திருக்குர்ஆன் என்ற ஆயுதத்தை கையில் எடுத்துக் கொள்ளுங்கள். வெற்றி உங்களுக்குத்தான். இந்த ஒளிக்கு முன்னால் எந்த இருளும் நிலைக்க முடியாது. (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 386)

ஹுஸூர்! எனது நாவு திருக்குர்ஆனை அழகிய முறையில் உச்சரிக்க எனக்காக துஆ செய்யுங்கள் என்று ஒருவர் கேட்டுக் கொண்டார். எனது நாவு திருக்குர்ஆனை ஓதும் அளவு சரளமாக இயங்குவதில்லை. எனது நாவு நன்றாக இயங்க துஆ செய்யுங்கள் என்றார். அதற்கு அன்னார் (அலை) கூறினார்கள்: நீங்கள் பொறுமையுடன் திருக்குர்ஆனை ஓதி வாருங்கள். அல்லாஹ் உங்களது நாவை சரளமாக்கி விடுவான். திருக்குர்ஆனில் இந்த ஒரு பரக்கத்தும் இருக்கிறது. இதனால் மனிதர்களின் சிந்தனை தூய்மையடைகிறது. நாவு சரளமாகிறது. இன்றும் சொல்வதென்றால், மருத்துவர்கள் கூட இந்த நோய்க்குப் பெரும்பாலும் இதையே சிகிச்சையாகக் கூறுகின்றார்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 105)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை மிக நெருக்கமாக பார்த்தவர்கள், அவர்களோடு நெருங்கிப் பழகியவர்கள் ஹுஸூர் (அலை) அவர்களுக்குத் திருக்குர்ஆன் மீது அளவற்ற அன்பு இருந்ததற்கும் அதனை ஓதி வருவது அவர்களது வழக்கமாக இருந்ததற்கும் சாட்சியாவார்கள். ஒரு சில அறிவிப்புகளை நான் முன் வைக்கிறேன். இதிலிருந்து அன்னாருக்குத் திருக்குர்ஆன் மீதிருந்த அளவற்ற அன்பை (ஓரளவு) கணிக்க முடிகிறது.

குர்தாஸ்பூர் மாவட்டம், லங்கர்வால் பகுதியைச் சார்ந்த மிர்ஸா தீன் முஹம்மது சாஹிப் அறிவிக்கின்றார்கள்: நான் என் குழந்தைப் பருவத்திலிருந்தே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைப் பார்த்து வருகிறேன். முதன் முறையாக நான் அன்னாரை மிர்ஸா குலாம் முர்தஸா அவர்கள் உயிருடன் இருக்கும்போது பார்த்தேன். அப்போது நான் சிறு பிள்ளையாக இருந்தேன். அன்னாரை இரவில் இஷா தொழுகைக்குப் பின் விரைவாக தூங்கி விடுவார்கள். பிறகு இரவு ஒரு மணியளவில், தஹஜ்ஜுத் தொழுவதற்காக எழுந்து விடுவார்கள். தஹஜ்ஜுத் தொழுது விட்டு திருக்குர்ஆன் ஓதிக் கொண்டிருப்பார்கள். இது அன்னாருடைய பழக்கமாக இருந்தது. ஃபஜ்ர் தொழுகைக்கு பாங்கு சொல்லப்பட்ட பின் வீட்டில் சுன்னத் தொழுதுவிட்டு தொழுகைக்காகப் பள்ளிக்குச் செல்வார்கள். அங்கு ஜமாஅத்தாக தொழுவார்கள்.

(சீரத்துல் மஹ்தி பாகம் 3 பக்கம் 513, 514)

இவ்வாறே மிர்ஸா சுல்தான் அஹ்மது சாஹிப் அறிவிக்கின்றார்கள்: எனது தந்தையார் மூன்று நூல்களை மிக அதிகமாக படித்து வந்தார்கள். திருக்குர்ஆன், மஸ்னவி ரூமி மற்றும் தலாயிலுல் கைராத். சில குறிப்புகள் எடுத்தும் வந்தார்கள். திருக்குர்ஆனை மிக அதிகமாக ஓதி வந்தார்கள்.

(சீரத்துல் மஹ்தி பாகம் 1 பக்கம் 199)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வாதம் புரிவதற்கு முன் பணி நிமித்தமாக சியால்கோட்டில் தங்கியிருந்தார்கள். அப்போது இருந்த சூழ்நிலையை மவ்லவி மீர் ஹஸன் சாஹிப் சியால்கோட்டி அவர்கள் கூறுகிறார்கள்:

ஹஸ்ரத் மிர்ஸா சாஹிப் முதலில் காஷ்மீரியா(ன்) பகுதியில், பிழைகளால் நிறைந்த இந்த எளியவனின் வீட்டிற்கு மிக அருகில் உள்ள உம்ரா என்ற பெயருடைய காஷ்மீரியின் வீட்டிற்கு வாடகைக்கு இருந்தார்கள். நீதிமன்றத்திலிருந்து திரும்பி வந்ததும் திருக்குர்ஆன் ஓதுவதில் ஈடுபடுவார்கள். உட்கார்ந்தும் நின்றபடியும் உலாவிக் கொண்டும் திருக்குர்ஆன் ஓதுவார்கள். மேலும் தேம்பித் தேம்பி அழுவார்கள். எந்த அளவு மிகவும் உருக்கத்துடனும், ஏக்கத்துடனும்

ஓதுவார்கள் என்றால், அதற்கு உதாரணமே கிடையாது.

**(சீரத்துல் மஹ்தி, பாகம் 1 பக்கம் 252)**

இவ்வாறே கபூர்தலாவைச் சேர்ந்த ஹஸ்ரத் முன்ஷீ ஸஃபர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: முன்ஷி அப்துல் வாஹித் சாஹிப் ஒரு காலத்தில் பட்டாலாவில் தாசில்தாராக இருந்தார்கள். முன்ஷி அப்துல் வாஹித் சாஹிப் பெரும்பாலும் பட்டாலாவிலிருந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தந்தையார் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் முர்தஸா சாஹிபை சந்திக்க வருவதுண்டு. அவர்கள் கூறுகிறார்கள்:

அப்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வயது 14 அல்லது 15 இருக்கும். அந்த வயதிலும் ஹஸ்ரத் சாஹிப் நாள் முழுதும் திருக்குர்ஆன் ஓதி அடிக்குறிப்பு எழுதிக் கொண்டே இருப்பார்கள். மேலும் மிர்ஸா குலாம் முர்தஸா சாஹிப் பல முறை இவ்வாறு கூறினார்கள்: எனது இந்த மகனுக்கு யாரோடும் எந்த சம்பந்தமும் கிடையாது. நாள் முழுவதும் பள்ளிவாசலிலேயே இருப்பார். திருக்குர்ஆன் ஓதிக்கொண்டே இருப்பார். முன்ஷி அப்துல் வாஹித் சாஹிப் பல முறை காதியானுக்கு வந்து செல்வார்கள். அவர்கள் நான் எப்போதும் ஹஸ்ரத் சாஹிபை திருக்குர்ஆன் ஓதிக் கொண்டிருக்கக் கண்டேன் என்று கூறினார்கள்.

**(சீரத்துல் மஹ்தி, பாகம் 4 பக்கம் 26)**

1907 ஆம் ஆண்டு ஹஸ்ரத் பீவீ சாஹிபா (உம்முல் முஃமீன் (ரலி) அவர்கள்) லாஹூருக்கு சென்ற பிறகு அவர்கள் திரும்பி வருகின்ற செய்தி கிடைத்ததும் அவர்களை அழைத்து வர ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பட்டாலா சென்றார்கள். ஹஸ்ரத் சாஹிப் பல்லக்கில் அமர்ந்து புறப்பட்டார்கள். அதை எட்டு வேலையாட்கள் சுழற்சி முறையில் சுமந்து சென்றார்கள். காதியானிலிருந்து புறப்படும்போதே ஹஸ்ரத் சாஹிப் திருக்குர்ஆனைத் தம்முன் திறந்து வைத்துக் கொண்டார்கள். சூரா ஃபாத்திஹா ஓத ஆரம்பித்தார்கள்.

நான் மிகவும் கவனமாக பார்த்துக் கொண்டிருந்தேன். பட்டாலா வரை ஹஸ்ரத் சாஹிப் சூரா ஃபாத்திஹாவை ஓதிக் கொண்டிருந்தார்கள். வேறு பக்கத்தை திருப்பவே இல்லை. வழியில் ஓரிடத்தில் ஹஸ்ரத் சாஹிப் ஒரு நதிக்கு அருகில் இறங்கி சிறுநீர் கழித்தார்கள். பிறகு உளூ செய்து விட்டு பல்லக்கில் அமர்ந்து கொண்டார்கள். பிறகு மீண்டும் அன்னார் அவ்வாறே சூரா ஃபாத்திஹா ஓதுவதில் மூழ்கி விட்டார்கள்.

**(சீரத்துல் மஹ்தி, பாகம் 6பக்கம் 395)**

ஹஸ்ரத் முஃப்தி முஹம்மது சாதிக் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அழுவதை ஒரு முறை தான் கண்டிருக்கிறேன். அன்னார் ஒரு முறை தொண்டர்களுடன் நடை பயிற்சிக்கு சென்று கொண்டிருந்தார்கள். அந்த நாள்களில் ஹாஜிபூராவைச் சேர்ந்த ஹாஜி ஹபீபுர் ரஹ்மான் சாஹிப் அவர்களின் மருமகன் காதியான் வந்திருந்தார். ஹுஸூர்! இவர் திருக்குர்ஆன் மிகவும் அழகாக ஓதுவார் என்று ஒருவர் கூறினார். ஹஸ்ரத் சாஹிப் அங்கேயே வழியில் ஓர் ஓரத்தில் அமர்ந்து கொண்டார்கள். பிறகு சற்று திருக்குர்ஆன் ஓதிக் காட்டுங்கள் என்றார்கள். அவர் திருக்குர்ஆன் ஓத ஆரம்பித்தபோது அன்னாரின் கண்களில் கண்ணீர் ததும்பியிருந்ததை நான் பார்த்தேன்.

**(சீரத்துல் மஹ்தி, பாகம் 6 பக்கம் 394)**

நான் பல சம்பவங்களை உதாரணமாக எடுத்துக் கூறியுள்ளேன். இவை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் திருக்குர்ஆனை நேசிப்பவர்கள் என்பதற்கு சாட்சி பகர்கின்றன. அன்னார் தாம் திருக்குர்ஆனை அளவற்ற முறையில் நேசித்து இரவு பகலாக அதனை ஓதி வந்தது மட்டுமின்றி பிறருக்கும் அதுவும் குறிப்பாக தம்மை பின்பற்றுகின்ற மக்களுக்குத் திருக்குர்ஆன் மீது அளவில்லா நேசம் கொள்ளவும் அதனை அதிகமாக ஓதி வரவும் அதன் கட்டளைகள் படி செயல்பட்டு வரவும் வலியுறுத்தி வந்தார்கள்.

அன்னார் திருக்குர்ஆனின் மகத்துவம் மற்றும் அதன் மாபெரும் சிறப்புகள் (எவற்றின் காரணமாக அது அதிகமாக ஓதப்படுவதற்கும் அதை நேசிப்பதற்கும் அதன் கட்டளைகள்படி செயல்படுவதற்கும் தகுந்ததாக உள்ளதோ) அவற்றைப் பற்றிக் குறிப்பிட்டவாறு கூறுகிறார்கள்: நான் இளைஞனாக இருந்தேன். இப்போது முதுமை அடைந்து விட்டேன். மக்கள் விரும்பினால் சாட்சி சொல்லலாம். நான் உலகியல் வேலைகளில் ஈடுபடவில்லை. மார்க்கப் பணிகளை செய்வதிலேயே எப்போதும் எனது ஆர்வம் இருந்து வந்துள்ளது. திருக்குர்ஆன் என்ற இந்த மறையை நான் மிகவும் தூயதாகவும் ஆன்மீக ஞானம் நிறைந்ததாகவும் காணப் பெற்றேன். அது எந்த ஒரு மனிதனையும் இறைவனாக்குவதும் இல்லை.

ஆன்மாவையும் உடலையும் இறைவனது படைப்பினத்தை விட்டு விதிவிலக்காக ஆக்கி அவன் மீது பழிசுமத்தி இழிவுபடுத்துவதும் இல்லை. எதற்காக மார்க்கத்தை ஏற்றுக் கொள்ளப்படுகிறதோ அந்த அருளை இந்த மறை கடைசியில் மனிதனின் உள்ளத்தின் ஊடுருவிச் செய்து விடுகிறது. மேலும் அவனை இறைவனுடைய அருட்களுக்கு சொந்தக்காரராக ஆக்கி விடுகிறது. ஆகவே நாம் ஏன் ஒளியைப் பெற்றுக் கொண்ட பின் மீண்டும் இருளுக்கு திரும்ப வேண்டும்? கண்களைப் பெற்றுக் கொண்ட பின் குருடராக வேண்டும்?

**(ஸனாதன் தர்ம் பக்கம் 6,7)**

திருக்குர்ஆனுக்கு கண்ணியம் மற்றும் மதிப்பளிப்பதைப் பொறுத்தவரை இது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு நிகர் யாருமில்லை. அன்னார் (அலை) திருக்குர்ஆனுக்கு எந்த அளவு மகத்துவம் அளித்து வந்தார்கள் என்றால், அன்னாரால் ஒரு கணப்பொழுது கூட திருக்குர்ஆனின் அவமரியாதையை பொறுத்துக் கொள்ள முடியாமல் இருந்தது. இது தொடர்பாக ஓர் அறிவிப்பு வருகிறது. அதிலிருந்து இந்த விஷயத்தைக் கணிக்க முடிகிறது. ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

எங்களுடைய கண்ணியத்திற்குரிய தாயார் என்னிடம் கூறினார்கள்: ஒரு முறை உனது சகோதரன் முபாரக் அஹ்மது குழந்தைப் பருவத்தில் கவனக்குறைவால் திருக்குர்ஆனை அவமதிக்கும் வகையிலான ஒரு செயலை செய்து விட்டார். அதனால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு எந்த அளவுக்கு கோபம் வந்தது என்றால், அன்னாரின் முகம் சிவந்து விட்டது. அன்னார் மிகவும் கோபத்துடன் முபாரக் அஹ்மதின் தோளில் அடித்தார்கள். அதன் காரணமாக அவரது மிருதுவான சருமத்தில் அவர்களின் விரலின் அடையாளம் விழுந்தது.

அன்னார் அந்த கோபத்தின் நிலையில், இவரை இப்போது என் முன்னாலிருந்து அழைத்துச் சென்று விடுங்கள் என்று கூறினார்கள். (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்) சகோதர்களிலேயே மர்ஹூம் முபாரக் அஹ்மது மிகவும் இளையவராக இருந்தார். ஹஸ்ரத் சாஹிபின் காலத்திலேயே அவர் வஃபாத் ஆகி விட்டார். ஹஸ்ரத் சாஹிப் அவரை மிகவும் நேசித்து வந்தார்கள். அவர் வஃபாத் ஆன பிறகு அவரது கப்ரில் வைக்கப்படும் நடு கல்லில் எழுதுவதற்காக அவர்கள் கூறிய கவிதையில் ஒரு வரி இவ்வாறு வருகிறது: எனக்கு மிகவும் பிரியமான முபாரக் அஹ்மது அழகான வடிவமும், தூய இயல்பும் உடையவர். நம் மனதை கவலையில் ஆழ்த்தி விட்டு அவர் இன்று நம்மை விட்டுப் பிரிந்துள்ளார். முபாரக் அஹ்மது மிகவும் நற்பண்பு கொண்ட குழந்தையாவார். மரணத்தின்போது அவருக்கு 8 வயதை விட சற்று அதிகம் வயது இருந்தது. ஆனால், அவர் திருக்குர்ஆனை அவமதித்ததைக் கண்டு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அதற்கு தண்டனை கொடுப்பதை அவசியமாகக் கருதினார்கள்.

**(சீரத்துல் மஹ்தி, பாகம் 2 பக்கம் 301, 302)**

ஆக இவை தான் அந்த சில சம்பவங்கள் ஆகும். இவற்றிலிருந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்குத் திருக்குர்ஆன் மீதிருந்த நேசம், அளவற்ற முறையில் வேதத்தை ஓதுவதற்கான ஆர்வம், திருக்குர்ஆனுக்கு கண்ணியமும், மதிப்பும் அளித்தல், அது குறித்து அன்னாரின் உள்ளத்தில் நிறைந்திருந்த தன்மான உணர்வு ஆகியவை ஓரளவு தெரிய வருகின்றன.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது ஜமாஅத் மக்களுக்கு அறிவுரை வழங்கியவாறு கூறுகின்றார்கள்:

உங்களுக்கான ஒரு அவசியமான போதனை இதுவாகும். திருக்குர்ஆனை கைவிடப்பட்ட ஒன்றைப்போல் ஆக்கி விடாதீர்கள். உங்களின் வாழ்வு இதிலேயே அடங்கியுள்ளது. திருக்குர்ஆனுக்கு கண்ணியமளிப்பவர்கள் வானத்தில் கண்ணியம் பெறுவார்கள். எவர்கள் ஒவ்வொரு ஹதீஸ் மற்றும் ஒவ்வொரு சொற்களை விடவும் திருக்குர்ஆனுக்கு முன்னுரிமை அளிப்பார்களோ அவர்களுக்கு வானத்தில் முன்னுரிமை அளிக்கப்படும்.

பூமியில் திருக்குர்ஆனைத் தவிர மனித குலத்திற்கு வேறு எந்த வேதமும் இல்லை. மேலும் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களைத் தவிர ஆதமின் சந்ததிகளுக்கு இப்போது எந்த இறைதூதரும், பரிந்துரைப்பவரும் இல்லை. ஆகவே நீங்கள் இந்த மாபெரும் கம்பீரமான நபியுடன் உண்மையான நேசம் கொள்ள முயலுங்கள். அவருக்கு கொடுக்கப்படும் மதிப்பைப் பிறருக்குக் கொடுக்காதீர்கள். அப்போது தான் நீங்கள் வானத்தில் இரட்சிக்கப்பட்டவர்களாக எழுதப்படுவீர்கள்.

(கிஷ்தி நூஹ், ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 13, 14)

ஸய்யிதுனா ஹஸ்ரத் அக்தஸ் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்தப் போதனைகளின் ஒளியில் ஹஸ்ரத் அமீருல் மூமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:

நாம் ஒவ்வொருவரும் எந்தளவுக்கு திருக்குர்ஆனை நேசிக்கின்றோம்? அதன் கட்டளைகளை ஏற்கிறோம். அவற்றின்படி செயல்படுகின்றோம் என்று நம்மில் ஒவ்வொருவரும் தம்மைத்தாமே ஆய்வு செய்து பார்க்க வேண்டும். அன்பை வெளிப்படுத்துவதற்கும் வழிமுறைகள் உள்ளன. தினந்தோறும் தொடர்ச்சியாக 2 அல்லது 3 ருகூ ஓதுவதை ஒவ்வோர் அஹ்மதியும் தன் மீது கடமையாக்கிக் கொள்ள வேண்டும். இது எல்லாவற்றையும் விட அவசியமானது. பிறகு அடுத்த படியாக மொழியாக்கத்தைப் படிக்க வேண்டும். தினந்தோறும் திலாவத் செய்வதுடன் அதன் மொழியாக்கத்தையும் ஓதி வருவதால் மெல்ல மெல்ல இந்த அழகிய போதனை நம்மையும் அறியாது நமது மூளையில் பதிய ஆரம்பித்து விடுகிறது.

(ஷராயித்தே பைஅத் அவர் அஹ்மதி கீ ஸிம்மதாரியான் பக்கம் 12, 13)

திருக்குர்ஆன் மீது ஒப்பற்ற அன்பு கொள்ளவும், இரவு பகலாக அதனை ஓதி வரவும் அதன் கட்டளைகளின்படி செயல்படவும் அல்லாஹ் நம் அனைவருக்கும் நல்வாய்ப்பு வழங்குவானாக. ஆமீன்.

وآخر دعوانا أن الحمد لله رب العالمين

(தமிழாக்கம்: மவ்லவி அதாவுல் முக்னி சாஹிப்)

......☆......☆......☆......


## நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்

**தொலைபேசி எண்: 1800 103 2131**

இந்த **TOLL FREE** எண்ணில் ஃபோன் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)


## பதர் பத்திரிகையை நீங்களும் படித்து உங்களது நண்பர்களையும், சகோதரர்களையும் படிப்பதற்கு கவனமூட்டவும்

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் டிசம்பர் 2014 ஆண்டு பதர் பத்திரிகையின் சிறப்பு வெளியீட்டின் போது தமது தூதுச் செய்தியை வழங்கியவாறு இவ்வாறு கூறினார்கள் :

இந்த பத்திரிகை ஜமாஅத்தின் ஆன்மீக சீர்திருத்தம் மற்றும் முன்னேற்றத்திற்காக தொடங்கப்பட்டது. மேலும் நமது முன்னோர்களுக்கு நெருக்கடியான சூழ்நிலைகள் இருந்தும் கூட தமது உயிரை அர்ப்பணித்தவாறு இப்பத்திரிகையை தொடர்ந்து இயங்கி வரும்படி செய்துள்ளனர். மேலும் அவர்களுடைய துஆக்கள் மற்றும் தூய முயற்சிகளின் அருளால் தான் இன்று வரை இது தொடர்ந்து வெளி வந்து கொண்டிருக்கின்றது என்ற இவ்விஷயத்தை பதர் துறையும், பதர் பத்திரிகையின் வாசகர்களும் எப்போதும் நினைவிற் கொள்ள வேண்டும். மேலும் அதிகம் அதிகமான அஹ்மதிகள் இதைப் படிக்க வேண்டும். மேலும் இதிலிருந்து பலன் பெற வேண்டும் என்பதை இவ்விஷயமானது நம்மிடம் எதிர்பார்க்கின்றது. அல்லாஹ் தனது அருளால் இந்திய அஹ்மதிகளுக்கு குறிப்பாகவும், மற்ற நாடுகளில் வசிக்கக்கூடிய அஹ்மதிகளுக்கு பொதுவாகவும் இதைப் படிப்பதற்கும், இதனோடு தொடர்புள்ள அருட்களை சேகரிப்பதற்கும் நல்வாய்ப்பினை வழங்குவானாக. ஆமீன்.

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களது மிகவும் முக்கியமான மற்றும் எழுச்சியூட்டக்கூடிய இந்த கூற்றுகளுக்கேற்ப, இந்திய அஹ்மதிய்யா ஜமாஅத்தைச் சார்ந்தவர்களிடம் விரும்பி வேண்டி கேட்டுக் கொள்ளப்படுவது என்னவென்றால், ஒவ்வொரு வீட்டிலும் பதர் பத்திரிகை படிப்பதை உறுதி செய்வது மிகவும் முக்கியமாகும். இதில் திருக்குர்ஆன், ஹதீஸ் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது கூற்றுகள் மட்டுமின்றி ஹுஸூர் அவர்களுடைய குத்பா ஜுமுஆ பேருரை மற்றும் சொற்பொழிவுகள் மற்றும் ஹுஸூர் அவர்கள் பல்வேறு நாடுகளில் மேற்கொண்ட சுற்றுப் பயணங்கள் தொடர்பான ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய அறிக்கைகள் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டு வருகின்றன. இதைப் படிப்பது ஒவ்வொரு அஹ்மதிக்கும் கட்டாயமாகும். அல்லாஹ்வின் அருளால் பதர் பத்திரிகை தற்போது ஹிந்தி, வங்காளம், தமிழ், மலையாளம், தெலுங்கு மற்றும் ஒடியா ஆகிய மொழிகளிலும் வெளி வந்து கொண்டிருக்கின்றது.

அஹ்மதிகளில் எவர்கள் தற்போது வரை பதர் பத்திரிகையை வாங்கவில்லையோ அவர்கள் பதர் பத்திரிகையை தாமும் வாங்கி படிக்க வேண்டும். மேலும் தம்முடைய குழந்தைகள் மற்றும் வீட்டிலுள்ள இதர உறுப்பினர்கள் அனைவரையும் இந்த பத்திரிகையை படிக்கச் செய்வதற்கான ஏற்பாடுகளையும் செய்து கொடுக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். ஹுஸூர் அவர்களின் கூற்றிற்கேற்பே செயல்படும் நற்பாக்கியத்தை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக. ஆமீன்.

பதர் பத்திரிகை முறையாக கிடைக்கவில்லை என்பது தொடர்பான புகாராக இருந்தாலும் சரி; அல்லது சந்தா செலுத்துவது தொடர்பான விஷயமாக இருந்தாலும் சரி கீழ்க்கண்ட தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளவும்.

+91 1872 224757 +91 99153 79255

managerbadrqnd@gmail.com

**மேனேஜர் பதர் பத்திரிகை**
**காதியான்**

## அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முன்னேற்றங்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் முன்னறிவிப்புகளின் ஒளியில்

(மவ்லவி முனீர் அஹ்மது காதிம் – அடிஷனல் நாஸிர் இஸ்லாஹ்–வ–இர்ஷாத், தென் இந்தியா)

எனது சொற்பொழிவின் தலைப்பு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முன்னேற்றங்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் முன்னறிவிப்புகளின் ஒளியில் என்பதாகும். அல்லாஹ் எப்போதெல்லாம் தன் தூதர்களை அனுப்புகின்றானோ, அப்போதெல்லாம் அவர்களின் வருகை மிகவும் பலவீனமான, எளிய மற்றும் வறிய சூழ்நிலையில் தான் இருந்துள்ளது. இதுவே இறைவனின் நடைமுறை. அந்தத் தூதரும் அவரை பின்பற்றுபவர்களும் தமது ஆன்மீக பயணத்தை மிகவும் அநீதி இழைக்கப்பட்ட நிலையில் தான் தொடங்குகின்றனர். உலகம் அவர்களை துன்புறுத்துகின்றது. இந்த உலகில் அவர்கள் வாழவே முடியாத அளவுக்கு நெருக்கடி கொடுக்கப்படுகின்றது. நாலா புறமும் அவர்கள் மீது அக்கிரமங்கள் மழைபோல் பொழிய வைக்கப்படுகின்றன. ஆனால் அந்தத் தூதர் தன்னை அனுப்பி வைத்த இறைவனின் பெயரை மேலேங்கச் செய்வதற்காக அவனது ஆதரவால் அந்த இயக்கத்தை வளர்த்துக் கொண்டே செல்கிறார். அல்லாஹ் அவரது கையை பிடித்துக் கொள்கின்றான். தன் தூதருக்கும் அவரை ஏற்றுக் கொண்டவர்களுக்கும் தைரியமூட்டுகின்றான். அவரது உண்மைத்துவத்துக்கு அடையாளமாக நீங்கள் அஞ்ச வேண்டாம் என்று கூறுகின்றான்.

اِنَّ الَّذِيْنَ يُحَآدُّوْنَ اللّٰهَ وَرَسُوْلَهٗٓ اُولٰٓئِكَ فِي الْاَذَلِّيْنَ ﴿٢١﴾

كَتَبَ اللّٰهُ لَاَغْلِبَنَّ اَنَا وَرُسُلِيْ ؕ اِنَّ اللّٰهَ قَوِيٌّ عَزِيْزٌ ﴿٢٢﴾

அதாவது நிச்சயமாக அல்லாஹ்வையும், அவனது தூதரையும் எதிர்ப்பவர்கள் மிகவும் இழிவடைந்தவர்களில் உள்ளவர்களாவார்கள். நிச்சயமாக நானும் எனது தூதர்களும் வெற்றி பெற்றே தீருவோம் என அல்லாஹ் விதித்துள்ளான். நிச்சயமாக அல்லாஹ் ஆற்றல் மிக்கவனும், வெற்றிக்குரியவனுமாவான். (58:21, 22)

அவ்வாறே தன் தூதருக்கு ஆறுதல் அளித்தவாறு அல்லாஹ் கூறுகின்றான்:

وَلَقَدْ سَبَقَتْ كَلِمَتُنَا لِعِبَادِنَا الْمُرْسَلِيْنَ ﴿١٧٢﴾

اِنَّهُمْ لَهُمُ الْمَنْصُوْرُوْنَ ﴿١٧٣﴾ وَاِنَّ جُنْدَنَا لَهُمُ الْغٰلِبُوْنَ ﴿١٧٤﴾

தூதர்களாகி நம் அடியார்களைக் குறித்து நம் தீர்ப்பு ஏற்கனவே நிகழ்ந்து விட்டது. (அதாவது) நிச்சயமாக அவர்களுக்கே உதவி அளிக்கப்படும். மேலும் எமது படையின(ராகிய நம்பிக்கையாள)ர்களே கட்டாயம் வெல்வர். (37: 172–174)

எல்லா நபிமார்களும் மிகவும் பலவீனமான நிலையில் தான் தோன்றுகின்றார்கள். அவர்களின் பலவீனத்தின் உண்மை நிலைக்கு இதுவே சான்றாக உள்ளது. அதாவது அவர்கள் எல்லா வித அநீதிகளையும் சகித்தக் கொண்டு அவர்கள் பொறுமையை கைவிடுவதில்லை. மேலும் ஒவ்வொரு நபிக்கும் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

وَاسْتَعِيْنُوْا بِالصَّبْرِ وَالصَّلٰوةِ ؕ وَ اِنَّهَا لَكَبِيْرَةٌ اِلَّا عَلَى الْخٰشِعِيْنَ

அதாவது எதிரிகளின் அநீதிக்கு எதிராக இறைவனிடம் பொறுமை மற்றும் துஆவைக் கொண்டு உதவி தேடுங்கள். (2:46)

பிறகு அல்லாஹ் துஆவும் கற்றுத் தருகின்றான்:

رَبَّنَآ اَفْرِغْ عَلَيْنَا صَبْرًا وَّ ثَبِّتْ اَقْدَامَنَا

وَانْصُرْنَا عَلَى الْقَوْمِ الْكٰفِرِيْنَ

எங்கள் இறைவா! எங்களுக்குச் சகிப்புத்தன்மையைத் தந்தருள்வாயாக. மேலும் எங்கள் பாதங்களை உறுதிப்படுத்துவாயாக. மேலும் நிராகரிப்பவர்களுக்கு எதிராக எங்களுக்கு உதவி செய்வாயாக. (2:251)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்பும் ஆதம் (அலை) முதல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வரை இறைவனின் இந்த நடைமுறை தான் இருந்து வந்தது. பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் அவர்களின் சஹாபிகள் எந்தளவு கடுமையான அநீதியின் காலத்தை கடந்தார்கள் என்பதற்கு வரலாறு சான்று பகர்ந்துள்ளது. அவர்கள் அடிக்கப்பட்டார்கள். தரையில் இழுக்கப்பட்டார்கள். ஊரை விட்டு ஒதுக்கப்பட்டார்கள். சமுதாயத்தில் தம் உரிமைகளை விட்டு முற்றிலும் விலக்கி வைக்கப்பட்டார்கள். தம் வீடுகளை விட்டு துரத்தப்பட்டார்கள். கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட்டன. அவர்களில் பலர் ஷஹீதும் ஆக்கப்பட்டனர். இந்த ஷஹாதத்தின் நிகழ்வு தொடர்ந்து பல வருடங்கள் வரை நீடித்தது. ஆனால் முஸ்லிம்கள் மிகவும் பொறுமை காத்து வந்தனர். அந்த அநீதிக்கு ஆளானவர்களின் மேன்மை எந்தளவுக்கு இருந்ததென்றால், அநீதிகளையும், அக்கிரமங்களையும் சகித்துக் கொண்டு இருந்த அந்த மக்களுக்கு இறைவன் வெற்றியை வழங்கியதும் எதிரிகளை மன்னித்து விட்டார்கள். இதுவே அவர்களின் உண்மைத்துவத்திற்கான மாபெரும் அடையாளமாகும்.

கண்ணியமிக்கவர்களே! இறைவனின் இந்த நடைமுறை தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை நேசர் இக்காலத்தின் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களின் அருளுக்குரிய காலகட்டத்திலும் நடைமுறையில் இருந்தது. அவர்களின் இந்த அருளுக்குரிய காலகட்டத்தை பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னறிவிப்பு வழங்கியுள்ளார்கள். அவர்களின் காலகட்டத்தின் தொடக்கமும் அநீதியின் நிலையிலேயே தொடங்கும். மேலும் இமாம் மஹ்தி (அலை) அவர்களின் காலத்தில் உள்ள பேரிழந்த எதிரிகளும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தின் எதிரிகள் அவர்களுடனும் அவர்களின் சஹாபிகளுடனும் எவ்வாறு நடந்து கொண்டார்களோ அவ்வாறே நடந்து கொள்வார்கள்.

இதைப் பற்றி ஈருலகத் தலைவர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இஸ்ரவேலின் மக்கள் 72 பிரிவுகளாக பிரிந்தனர். எனது சமுதாயமோ 73 பிரிவுகளாக பிரிந்து விடும்.

### நபிமொழியிலிருந்து...

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

### திருக்குர்ஆனிலிருந்து...

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad
(Sec.Waqf-e-Jadid, Melapalayam)

அவர்களின் ஒரு பிரிவைத் தவிர ஏனையவர்கள் எல்லாரும் நரகத்தில் இருப்பார்கள். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அந்த ஒரு பிரிவினரின் அடையாளம் என்ன? என்று மக்கள் கேட்டனர். தொடக்கத்தில் எனக்கும் என் சஹாபிகளுக்கும் என்ன நிலைமை இருந்து வந்ததோ அதே நிலைமை அவர்களுக்கும் இருக்கும். எனக்கும் என் சஹாபிகளுக்கும் எதிர்ப்பு இருந்தது. அவ்வாறே வரவிருக்கும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் அவரது சஹாபிகளுக்கு எதிர்ப்பு ஏற்படும் என்று கூறினார்கள்.

மாபெரும் சூஃபி ஹஸ்ரத் முஹ்யுத்தீன் இப்னு அரபி (ரஹ்) அவர்கள் எழுதியுள்ளார்கள்:

اذا خرج هذا الامام المهدی لم یکن له اعداء الا الفقهاء خاصة

அதாவது இமாம் மஹ்தி (அலை) தோன்றும்போது அவரது காலத்து மார்க்க அறிஞர்கள் அவருக்கு கடுமையான எதிரிகளாக ஆகி விடுவார்கள்.

இந்த முன்னறிவிப்பில் கூறப்பட்டபடி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தொடக்க காலகட்டத்தில் அவர்களின் உறவினர்கள் முதல் அந்த பகுதியிலுள்ள மக்கள் மற்றும் மவ்லவிகள் வரை அன்னாரை கடுமையாக எதிர்த்தார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உறவினர்களில், அவர்களின் தந்தையின் சகோதரர் மிர்ஸா நிஸாமுத்தீன் மற்றும் சொந்த சகோதரர் மிர்ஸா இமாமுத்தீன் ஆகியோர் அன்னாரின் கடும் எதிரிகளாயினர். இவர் (நவூதுபில்லாஹ்) கடை வைத்து வியாபாரம் நடத்துகிறார் என்று கூறி வந்தனர். சில நேரம் ஏசிப்பேசுவதற்காகவே ஒரு நபரை நியமித்து வைப்பார்கள். அவர் இரவு முழுவதும் அன்னாரின் வீட்டின் பக்கம் திரும்பி திட்டிக் கொண்டே இருப்பார். இப்படியாக ஒரு முறை ஒரு நபரைக் குறித்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: அவர் இரவு முழுவதும் திட்டிக் கொண்டே இருந்தார். இப்போது களைப்படைந்திருப்பார். எனவே இவருக்கு சிறிது உணவு கொடுத்து விடுங்கள் என்றார்கள். சுப்ஹானல்லாஹ். தனது எஜமானர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் அடியாராக இருந்த அவர்களின் மகத்துவமான நல்லொழுக்கம் எவ்வளவு உயர்ந்ததாக இருந்தது. காதியானில் அவர்களின் உறவினர்கள் மட்டுமல்லாது அஹ்மதியல்லாத மற்றும் முஸ்லிமல்லாத மக்களும் கடுமையாக எதிர்த்து வந்தார்கள்.

ஒரு முறை காபூலைச் சேர்ந்த ஹஸ்ரத் அஹ்மது நூர் சாஹிப் கூறினார்கள்: ஹுஸூர்! எதிரிகள் கடுமையாக துன்புறுத்துகின்றார்கள். ஏசிப்பேசுகின்றார்கள். எனவே அதனை எதிர்ப்பதற்கு எங்களுக்கும் அனுமதி தாருங்கள் என்றேன். இல்லை. பொறுமையை மேற்கொள்ளுங்கள். பொறுமையை ஒருபோதும் கைவிடாதீர்கள். உங்களால் பொறுமையாக இருக்க முடியவில்லையென்றால் காபூலுக்கு சென்று விடுங்கள் என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வீட்டின் வாசலுக்கு குறுக்கே ஒரு சுவரை கட்டி வழியை மறித்தனர். இதனால் அவர்களுக்கும் அவர்களின் சஹாபிகளுக்கும் மிகுந்த கஷ்டம் ஏற்பட்டது. வழக்கு போடப்பட்டது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு சாதகமாக வழக்கில் வெற்றி கிடைத்தது. அவர்கள் நஷ்ட ஈடு பெற்றுக் கொள்ள உரிமை வழங்கப்பட்டது. ஆனால் அவர்கள் அதனை மன்னித்து விட்டார்கள். இது அவர்களின் உறவினர்களின் நிலை. மறுபக்கம் மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி முழு இந்தியாவிலும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு (நவூதுபில்லாஹ்) ஹுஸூர் (மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)) காஃபிர் என்றும் தஜ்ஜால் என்றும் அவருக்குப் பின்னால் தொழக்கூடாது. அவருக்கு ஸலாம் சொல்லிப் பேசக் கூடாது. கொடுக்கல் வாங்கல் போன்ற சமூக செயல்பாடுகள் ஏதும் கூடாது என்றும் 200 மவ்லவிகளிடம் ஃபத்வா பெற்றுக் கொண்டு வந்தார்.

இதன் விளைவாக இந்தியா முழுவதும் எதிர்ப்பின் புயல் கிளம்பியது. அஹ்மதிகள் தாக்கப்பட்டார்கள். அவர்களின் உடைமைகள் சூரையாடப்பட்டன. சிலரை ஷஹீதாக்கினார்கள். அவர்களில் ஹஸ்ரத் மவ்லவி அப்துர் ரஹ்மான் சாஹிப் ஷஹீத் மற்றும் மவ்லானா அப்துல் லத்தீஃப் சாஹிப் ஷஹீது ஆகியோரின் ஷஹாதத் அஹ்மதிய்யத்தின் வானத்தில் பிரகாசமான விண்மீன்களாக பொறிக்கப்பட்டுள்ளன. ஒரு பக்கம் எதிர்ப்பு நடந்து கொண்டிருக்க மறுபக்கம் அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு ஜமாஅத்தின் முன்னேற்றங்களுக்கான செய்திகளை வழங்கிக் கொண்டிருந்தான். அவர்களுக்கு மகத்துவமிக்க வெற்றிகளுக்கான நற்செய்திகளை வழங்கி வந்தான். அல்லாஹ் அவர்களுக்கு மகிழ்ச்சிகரமான நற்செய்தி வழங்கியவாறு கூறினான்:

நீர் தோல்வியடைந்து அதாவது வெளிப்படையான பார்வைக்கு தோல்வியடைந்தவரைப் போல் எளிமையை அடைந்தப் பின்னர் இறுதியில் வெற்றி பெறுவீர். முடிவு உமதாகவே இருக்கும். உமது இடுப்பை ஒடித்து விடுகின்ற அந்த சுமையை நாம் உம்மிடமிருந்து இறக்கி வைத்து விடுவோம். உமது ஏகத்துவம், உமது மகத்துவம், உமது சிறப்புகள் ஆகியவற்றை நாம் பரப்புவோம். இறைவன் உமது முகத்தை வெளிப்படுத்துவான். உமது நிழலை நீட்டி விடுவான். உலகில் ஓர் எச்சரிப்பாளர் வந்தார். உலகம் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் இறைவன் அவரை ஏற்றுக் கொள்வான். மிக வலுவான தாக்குதல்கள் மூலம் அவரது உண்மையை வெளிப்படுத்தி விடுவான். மிக விரைவில் அவருக்கு ஒரு மகத்துவம் மிக்க ஆட்சி கொடுக்கப்படும். பல கருவூலங்கள் அவருக்காகத் திறக்கப்படும். நான் உமக்கு பூமியின் எல்லை வரை கண்ணியத்துடன் பிரபல்யம் வழங்குவோம். நாம் உம்மை மர்யமின் மகன் மஸீஹாக ஆக்கியுள்ளோம். (தத்கிரா பக்கம் 148, 149)

கண்ணியத்திற்குரியவர்களே! இந்த மகத்தும் மிக்க முன்னறிவிப்புகளின்படி ஆன்மீக வெற்றியின் தொடர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அருளுக்குரிய காலத்திலேயே தொடங்கி விட்டது. அவர்கள் 1884 ஆம் ஆண்டு பராஹீனே அஹ்மதிய்யா எழுதியபோது முழு நாட்டிலும் அதன் ஏற்புடைமை மற்றும் அதன் மூலமாக இஸ்லாத்தின் மேன்மையும், மகத்துவமும் வெளிப்பட ஆரம்பித்தன. பராஹீனே அஹ்மதிய்யாவின் மூலமாக கடந்த 1300 ஆண்டுகளாக முன்னுதாரணம் இல்லாத அளவிலான சேவையை இஸ்லாத்திற்காக அவர்கள் செய்துள்ளார்கள். பிறகு 1891–ல் அன்னார் அல்லாஹ்வின் கட்டளை மற்றும் இல்ஹாம்களின் ஒளியில் மஸீஹ் மற்றும் மஹ்திக்கான வாதம் புரிந்தபோது கடுமையான எதிர்ப்புக் குரல் எழுந்தது. அந்த காலத்தில் மிகவும் பிரபலமான மவ்லவிகளான, மவ்லவி நஸீர் ஹுஸைன் தெஹ்லவி, மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி, முஹம்மது பஷீர் போன்றோர் அன்னாருடன் விவாதம் செய்தனர்.

அந்த விவாதங்களில் அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வெற்றியை வழங்கினான் என்பது வரலாறு கூறும் சான்று. அந்த மவ்லவிகளால் திருக்குர்ஆன் மற்றும் நபிமொழியிலிருந்து மஸீஹ் (அலை) அவர்கள் உயிருடன்

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளோம். (51:57)

A.Nasir Ahmad (Naib Ameer Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam (Gen.Sec.Melapalayam)

இருக்கின்றார்கள் என்பதற்கு எந்தச் சான்றும் எடுத்துக் காட்ட முடியவில்லை. இந்த மகத்துவம் மிக்க வெற்றி இன்று வரை இருந்து வருகிறது. இப்போது அவர்கள் அஹ்மதிகளிடம் மஸீஹின் மரணம் குறித்து பேசுவதையே தவிர்க்கின்றனர். இப்போது இருக்கும் நிலையில் திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸின் ஒளியில் மஸீஹின் மரணம், கத்மே நுபுவ்வத் மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் உண்மைத்துவம் போன்ற தலைப்புகளில் ஆதாரத்துடன் பேச முடிவதில்லை. எனவே நம்மை ஏசிப் பேசுவதன் மூலம் தமது குறையை சரி செய்து கொள்கின்றனர். இறைவன் புறமிருந்து வந்த எந்த ஒரு தூதரும் அவரது காலத்தின் எதிரிகள் ஆதாரங்கள் இன்றி தோல்வியடைந்து அவமானத்திற்குள்ளாகி அந்தத் தூதர்களை இழிவுபடுத்தாமல் இருந்ததில்லை. இந்த கருத்தை இவர்கள் புரிந்து கொள்வதே இல்லை.

يٰحَسۡرَةً عَلَى الۡعِبَادِ ۚ مَا يَاۡتِيۡهِمۡ مِّنۡ رَّسُوۡلٍ اِلَّا كَانُوۡا بِهٖ يَسۡتَهۡزِءُوۡنَ

அல்லாஹ் கூறுகின்றான்: நிராகரிக்கும் அடியார்கள் மீது பரிதாபமே! எந்தத் தூதர் அவர்களிடம் வந்தாலும் அவர்கள் அவரை ஏளனத்திற்குள்ளாக்கவே செய்கின்றனர். **(36:31).**

இந்த எதிர்ப்பின் காலகட்டத்தில் (அஹ்மதிகளாகிய) நம்மவர்களிலும் சிலருக்கு தடுமாற்றம் ஏற்பட்டது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அல்லாஹ்வின் கட்டளையினால் 1891–ல் ஆண்டு மாநாட்டை தொடங்கினார்கள். அல்லாஹ்வின் புறமிருந்து செய்தியைப் பெற்று இவ்வாறு அறிவித்தார்கள்: இந்த மாநாட்டை சாதாரண மாநாடாக கருதாதீர்கள். இது தூய்மையான முறையில் உண்மைக்கு ஆதரவாகவும், இஸ்லாமிய கலிமாவை உயர்த்துவதை அடிப்படையாகவும் கொண்டது. இதன் அடிக்கல்லை இறைவன் தன் கையால் வைத்துள்ளான். இதற்காக சமுதாயங்களை ஆயத்தமாக்கியுள்ளான். அவை விரைவாக இதில் வந்து சேரும். ஏனென்றால், இது வல்லமைமிக்க அந்த இறைவனின் செயலாகும். அவனால் இயலாது என்று எதுவுமே இல்லை.

(7 டிசம்பர் 1891 அன்று வெளியிட்ட பிரசுரம்).

அந்த காலத்தில் நடந்த முதல் ஆண்டு மாநாட்டில் 70 நபர்கள் கலந்து கெண்டிருந்தனர். எதிரிகள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது ஃபத்வா கொடுத்து, அவர்களை சந்திப்பதை விட்டும் அவர்களிடம் பைஅத் செய்வதை விட்டும் முஸ்லிம்களை நாம் தடுத்து விட்டோம் என்று நினைத்தனர். அந்த அனைத்து எதிரிகளும் முகம் கவிழ்ந்தனர். காதியானின் பொலிவு மேலும் அதிகரித்தது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மரணத்திற்குப் பிறகு அஹ்மதிய்யா கிலாஃபத்தின் முதல் ஆண்டு மாநாட்டில் வருகை தந்தவர்களின் எண்ணிக்கை 3000–த்தை தொட்டது. பின்னர் கிலாஃபத்தின் காலகட்டத்தில் ஆண்டு மாநாட்டின் பொலிவு இன்னும் அதிகரித்தது. வருகை தருபவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தைக் கடந்து லட்சத்தை எட்டியது. உலகத்தின் இருபதிற்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்து கொள்கின்றனர். நூற்றுக்கணக்கான அஹ்மதியல்லாதவர்கள், முஸ்லிமல்லாத முக்கிய பிரமுகர்கள், அரசியல்வாதிகள், அமைச்சர்கள், நாட்டின் தலைவர்கள் போன்றோர் இம்மாநாட்டில் கலந்து கொள்வதையும் இதற்காகத் தமது தூதுச் செய்தியை அனுப்புவதையும் தமக்கு ஒரு பெருமை என்று கருதுகின்றனர். இந்த மாநாட்டின் வாயிலாக ஒவ்வொரு மார்க்கத்திற்கும் அன்பு, அமைதிக்கான குரல் கொடுப்பதற்காக ஒரு மேடை அமையப் பெற்றுள்ளது. இதில் மத, இன பாகுபாடின்றி எல்லாரும் அன்பு மற்றும் அமைதியின் குரலை உயர்த்துகின்றனர். மேலும் தமது அமைதியின் தூதுச் செய்தியை வழங்குகின்றனர்.

அல்ஹம்துலில்லாஹ். இப்போது இந்த மாநாடு அல்லாஹ்வின் அருளால் உலகெங்கும் கேட்கவும், பார்க்கவும் படுகின்றது. அத்துடன் உலகின் பல மொழிகளில் உடனுக்குடன் மொழிபெயர்ப்பும் செய்யப்படுகின்றது. இவ்வாண்டு யூ.கே–வின் ஆண்டு மாநாடு நடந்தது. அதில் உலகம் ஒரு வியக்கத்தக்க காட்சியைக் கண்டது. உலகின் பல்வேறு நாடுகளில் அவரவர் தத்தமது இடங்களில் இருந்து கொண்டே இந்த மாநாட்டைக் கேட்டுக் கொண்டும், பார்த்துக் கொண்டும் இருந்தவர்களை பார்த்தனர். இவ்வாறு முந்தைய சான்றோர்களின் முன்னறிவிப்பு நிறைவேறியது.

ان المومن فی زمان القائم وھوبالمشرق لیری اخاہ الذی فی
المغرب وکذاالذی فی المغرب یری اخاہ الذی فی المشرق

அதாவது இமாம் மஹ்தியின் காலகட்டத்தில் கிழக்கில் இருக்கும் ஒரு மூமின் மேற்கே இருக்கும் தன் சகோதரனை பார்ப்பார். அவ்வாறே மேற்கில் இருக்கும் ஒரு மூமின் கிழக்கில் இருக்கும் தன் சகோதரனைப் பார்ப்பார். இதற்கு முழு உலகமும் சாட்சி. அல்ஹம்துலில்லாஹ். அஹ்மதிய்யா கிலாஃபத்தின் மூலம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களால் இறைவனின் கட்டளையின்படி நிறுவப்பட்ட இந்த ஆண்டு மாநாட்டின் மூலம் இஸ்லாத்தின் வெற்றிக்கான இந்த முன்னறிவிப்பு மிகவும் மகத்தான முறையில் நிறைவேறி விட்டது.

இதைப்போன்று இன்னுமொரு முன்னறிவிப்பும் காணப்படுகிறது.

ینادی مناد من السماء باسم المھدی فیسمع من بالمشرق ومن
بالمغرب حتی لا یبقی راقد الا استیقظ

அதாவது மஹ்தியின் பெயரில் அழைப்பவர் ஒருவர் அழைப்பார். அவரது அழைப்பை கிழக்கிலும், மேற்கிலும் உள்ள அனைவரும் கேட்பார்கள். ஒரு நேரம் வரும். அப்போது தூங்குகின்ற ஒவ்வொருவரும் விழித்துக் கொள்வார்.

இது தவிர, இந்த மாநாடு உலகின் அனைத்து ஆன்மாக்களையும் பைஅத்தின் மூலம் ஒன்று சேர்க்கிறது. இது தொடர்பாக ஹஸ்ரத் ஷாஹ் வலியுல்லாஹ் சாஹிப் அவர்களின் முன்னறிவிப்பு உள்ளது. அதாவது இமாம் மஹ்தியிடம் பைஅத் செய்கின்றபோது வானத்திலிருந்து இவ்வாறு குரல் வரும்.

ھٰذاخلیفۃ اللہ المھدی فاسمعوا لہ واطیعو

இவரே அல்லாஹ்வின் கலீஃபா மஹ்தியாவார். அவரை ஏற்றுக் கொள்ளுங்கள். மேலும் அவருக்குக் கட்டுப்படுங்கள்.

(கியாமத் நாமா, பக்கம் 4)

பைஅத் செய்வதற்கான அந்த மகத்துவம் வாய்ந்த காட்சி மற்றும் ஆண்டு மாநாடு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வெற்றி மற்றும் உண்மைக்கு மகத்தான சான்றாகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் முன்னறிவிப்பின் உண்மைத்துவம் மற்றும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முன்னேற்றத்தின் ஒரு மைல் கல் ஆகும். இதன் பின்னர் 1894 ஆம் ஆண்டு அல்லாஹ் தன் அருளால், இமாம் மஹ்தியைக் குறித்து மிகவும் மகத்துவமான முறையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னறிவித்த சூரிய சந்திர கிரகணம் என்ற அடையாளத்தை நிறைவேற்றி, ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களின் உண்மைத்துவத்தை மிகவும் பிரகாசமாக வெளிப்படுத்தி விட்டான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த முன்னறிவிப்பின் உண்மைத்துவம் வானத்தின் சாட்சி என்ற அடிப்டையில் பிரகாசமான சூரியனைப் போன்று அன்னாரின் உண்மைத்துவத்தை நிரூபித்து விட்டது. ஆனால் உலகம் இந்த வானத்தின் அடையாளத்திலிருந்து பயன் பெறாததால், இமாம் மஹ்தியின் காலத்தில் பிளேக் நோய் பரவும் என்ற முந்தைய வேதங்களின் முன்னறிவிப்புகளின் ஒளியில் 1898–ல் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அல்லாஹ்வின் புறமிருந்து இல்ஹாம் பெற்று பிளேக் நோய் பரவும் என்று முன்னறிவிப்புச் செய்தார்கள். இதைப் பற்றிய செய்தி திருக்குர்ஆனிலும் காணப்படுகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)

அவர்களும் இதனை முன்னறிவித்துள்ளார்கள்.

திருக்குர்ஆனின் அந்–நம்ல் என்ற அதிகாரத்தின் 83 வது வசனத்தில் இவ்வாறு வருகிறது:

وَاِذَا وَقَعَ الْقَوْلُ عَلَيْهِمْ اَخْرَجْنَا لَهُمْ دَآبَّةً مِّنَ الْاَرْضِ تُكَلِّمُهُمْ ۙ اَنَّ النَّاسَ كَانُوْا بِاٰيٰتِنَا لَا يُوْقِنُوْنَ

அவர்களுக்கு எதிராக தீர்ப்பு வழங்கப்படும்போது நாம் அவர்களுக்காகப் பூமியிலிருந்து கடிக்கும் கிருமியை வெளிப்படுத்துவோம். மக்கள் நம் அடையாளங்களில் நம்பிக்கை கொள்ளாததே அதற்குக் காரணம். (27:83)

மேலும் ஹதீஸில் வந்துள்ளது. இமாம் மஹ்தியின் காலத்தில் மிகக் கடுமையான பிளேக் நோய் பரவும். ஏழு பேர் இருக்கும் ஒரு வீட்டில் ஐந்து நபர்கள் பிளேக் நோயால் மரணமடைவார்கள். இது அவரது வருகையின் காலகட்டத்தின் அடையாளமாகும். இமாம் மஹ்தியின் வருகைக்கு முன் இரண்டு விதமான மரணங்கள் ஏற்படும். ஒன்று, சிவப்பு மரணம். இன்னொன்று வெள்ளை மரணம். சிவப்பு மரணம் போர்களைக் குறிக்கும். வெள்ளை மரணம் பிளேக் நோயைக் குறிக்கும். ஒரு வீட்டில் 7 நபர்கள் இருந்தால் அவர்களில் 5 நபர்கள் இறந்து போகும் அளவுக்கு அதிகளவில் மரணங்கள் நிகழும்.

(பிஹாருல் அன்வார் பக்கம் 156)

இந்த முன்னறிவிப்புகளுக்கேற்ப மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இல்ஹாம்களின் ஒளியில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலகட்டத்தில் இந்தியாவில் பிளேக் நோய் பயங்கரமாகப் பரவியது. அதில் லட்சக்கணக்கான மக்கள் மாண்டு போனார்கள். இங்கே அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு, உமது வீட்டின் நான்கு சுவர்களுக்குள் இருப்பவர்கள் தடுப்பூசிப் போட்டுக் கொள்ளாவிட்டாலும், பிளேக் நோயின் கொடுந்தொற்றிலிருந்து பாதுகாப்பாக இருப்பார்கள். மேலும் அல்லாஹ் இந்த உலகிற்கு இந்த அற்புதத்தைக் காட்டினான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் குடும்பத்திலும் அவர்களின் சஹாபிகளிலும் ஒரு நபர் கூட பிளேக் நோயினால் மரணிக்கவில்லை. ஆனால் அவர்களை ஏளனம் செய்த அவர்களின் எதிரிகளான ஆலிம்களில் பலர் பிளேக் நோய்க்கு இரையானார்கள். அதே சமயம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி என்றும் வாதம் புரிந்த ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் பிளேக் நோய் வரும் என்று முன்னறிவிப்பு செய்ததற்கேற்ப பிளேக் நோய் தோன்றியது. மேலும் அந்த முன்னறிவிப்பிற்கேற்ப அவர்களின் வீட்டின் நான்கு சுவர்களுக்குள் இருந்தவர்கள் அனைவரும் இறைவனின் அருளால் பாதுகாப்பாக இருந்தனர். இந்த பிளேக் நோயின் விளைவாகவும், மிகப்பெரும் எண்ணிக்கையில் மக்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது நம்பிக்கை கொண்டனர் என்பதற்கு வரலாறு சான்று பகர்கின்றது. இவ்வாறு பிளேக் நோயும் அவர்களின் முன்னேற்றத்தின் மகத்துவம் மிக்க அடையாளமாக வெளிப்பட்டது.

கண்ணியத்திற்குரியவர்களே! ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அருளுக்குரிய காலகட்டத்தில் இந்த ஜமாஅத் தொடர்பாக செய்த பல முன்னறிவிப்புகளில் ஒன்று அஹ்மதிய்யா ஜமாஅத் பற்றியதாகும். இதைக் குறித்து அவர்கள் அல்வஸிய்யத் என்ற தமது நூலில் இவ்வாறு கூறியுள்ளார்கள்:

ஏனெனில் அந்த இரண்டாவது வல்லமையைக் காண்பதும் உங்களுக்கு அவசியமாகும். மேலும் அது வருவது உங்களுக்கு சிறந்ததாகும். ஏனெனில் அது நிரந்தரமானதாகும். அதன் தொடர் மறுமை வரை அறுந்து விடாது. நான் செல்லாத வரை இரண்டாவது வல்லமை வர முடியாது. ஆனால் நான் சென்று விட்டால் இறைவன் உங்களுக்காக அந்த இரண்டாவது வல்லமையை அனுப்புவான். அது எப்பொழுதும் உங்களுடன் இருக்கும். இறைவனின் வாக்குறுதி பராஹீனே அஹ்மதிய்யாவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அவ்வாக்குறுதி என்னைப்பற்றி அல்ல. மாறாக, உங்களைப் பற்றியதாகும். நான் உம்மை பின்பற்றும் உமது ஜமாஅத்தை மறுமை வரை மற்றவர்களின் மீது மேலோங்கச் செய்வேன் என இறைவன் கூறியுள்ளான். (அல்வஸிய்யத் பக்கம் 8)

அஹ்மதிய்யா கிலாஃபத் தோன்றிய நாள் 27 மே 1908 அன்று முதல் இன்று வரை 113 வருடங்கள் கழிந்து விட்டன. அஹ்மதிய்யா கிலாஃபத்தின் மூலம் அஹ்மதிய்யா ஜமாஅத் கடந்து வந்துள்ள முன்னேற்றப்படிகள் இதற்கு முன் வரலாற்றில் எங்கும் காண முடியாத முன்னேற்றங்களாகும். காதியானிலிருந்து புறப்பட்ட அஹ்மதிய்யத் இன்று உலகின் 213 நாடுகளில் பரவி விட்டது. ஹஸ்ரத் அமீருல் மூமினீன் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் 2019 ஆம் ஆண்டு யூ.கே மாநாட்டில் நிகழ்த்திய தமது உரையில் அதாவது 4 ஆகஸ்ட் 2019 அன்று ஆற்றிய உரையில் குறிப்பிட்டார்கள். இந்த உரையில் ஹுஸூர் அவர்கள் 2019–ல் மட்டும் ஜமாஅத்திற்கு கிடைத்த முன்னேற்றங்களை எடுத்துரைத்தவாறு கூறினார்கள்: 2018–19 ஆம் ஆண்டு வரை முழு உலகிலும் அஹ்மதிய்யா ஜமாஅத் 213 நாடுகளில் பரவி விட்டது.

ஹுஸூர் அவர்கள் இதனை விளக்கமாக கூறினார்கள்: இதுவரை ஐக்கிய நாடுகளின் சபையில் 195 நாடுகள் உறுப்பு நாடுகளாக பதவி வகிக்கின்றன. ஆனால் இவை தவிரவும் சில நாடுகள் உள்ளன. அவை உறுப்பினர்களாக இல்லை என்றாலும் அவை ஒரு நாடு என்ற வகையில் முறையாக நிலைபெற்றுள்ளன. 1984–ல் காலத்தின் கலீஃபாவுக்கு பாகிஸ்தானில் ஏற்பட்ட கடுமையான எதிர்ப்பின் காரணமாக ஹிஜ்ரத் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டபோது 1984 முதல் இப்போது வரை 121 நாடுகளில் ஜமாஅத் பரவியுள்ளது. அதாவது 1984 வரை 92 நாடுகளில் தான் அஹ்மதிய்யத் பரவியிருந்தது. 84 ஹிஜ்ரத்திற்குப் பிறகு 121 நாடுகுளில் ஜமாஅத் பரவி இருக்கிறது. இவ்வாறு பார்த்தால் 1889 முதல் 1984 வரையிலான 95 வருட காலகட்டத்தில் 92 நாடுகளில் பரவியிருந்த ஜமாஅத் ஹிஜ்ரத்துக்குப் பின் வெறும் 37 நாடுகளில் 121 நாடுகளில் பரவியுள்ளது. இந்த மகத்துவம் மிக்க வெற்றியானது, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அல்லாஹ் வழங்கிய மகத்துவம் மிக்க வெற்றியின் முன்னறிவிப்பு உண்மையானது என்பதற்கு மகத்தான சான்றாகும். இது அவர்களின் உண்மைத்துவத்திற்கு பிரகாசமான அடையாளமாகும்.

இது தவிர ஹுஸூர் அவர்கள் சமீபத்தில், 2021–ல் நடந்த ஆண்டு மாநாட்டில் கடந்த ஓராண்டில் மட்டும் ஜமாஅத்திற்கு கிடைத்த வியக்க வைக்கும் முன்னேற்றங்களை படம் பிடித்துக் காட்டியுள்ளார்கள். அவை யாவும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைத்துவத்திற்கும், அஹ்மதிய்யா கிலாஃபத்தின் உண்மைத்துவத்திற்குமான பேசும் சாட்சிகளாகும். ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், இமாம் மஹ்தி மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வெற்றியைக் குறித்து வழங்கிய முன்னறிவிப்புகள் அனைத்தும் உண்மை என்பதற்கும் இவையே சாட்சிகளாகும்.

ஹுஸூர் அவர்கள் ஓராண்டு மட்டும் ஜமாஅத்திற்கு கிடைத்த முன்னேற்றங்களை எடுத்துரைத்தவாறு கூறினார்கள்: 403 புதிய ஜமாஅத்துகள் நிறுவப்பட்டுள்ளன. 829 இடங்களில் முதன் முறையாக ஜமாஅத் அமையப் பெற்றுள்ளது. 211 பள்ளிவாசல்கள் கட்டப்பட்டுள்ளன. 92 நாடுகளில் 384 நூட்கள் 39 மொழிகளில் வெளியிப்பட்டுள்ளன. 123 புதிய பிரச்சார நிலையங்கள் அமையப் பெற்றுள்ளன. 102 நாடுகளில் ஜமாஅத்தின் கட்டுரைகள் வெளிவந்துள்ளன. 90 நாடுகளில் நூலகங்களில் ஜமாஅத் நூல்கள் வைக்கப்பட்டுள்ளன. 1970 கண்காட்சிகள் நடத்தப்பட்டுள்ளன. 103 நாடுகளில் 69 லட்சத்திற்கும் அதிகமான பிரசுரங்கள்

விநியோகிக்கப்பட்டுள்ளன. அல்ஹம்துலில்லாஹ். இப்போது MTA வின் 8 சேனல்கள் செயல்படுகின்றன. இவை 24 மணி நேரமும் உலகின் 17 மொழிகளில் இஸ்லாமிய நிகழ்ச்சிகளை ஒளிபரப்பிக் கொண்டிருக்கின்றன. இதன் வாயிலாக இலட்சக்கணக்கானோர் பயனடைந்து வருகின்றனர்.

27 வானொலி நிலையங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. புத்தக அரங்குகளின் மூலம் 22 லட்சம் நபர்கள் பயனடைந்தனர். மனிதம் முதலில் என்ற அமைப்பு 345 மருத்துவ முகாம்கள் நடத்தியுள்ளது. 75 ஆயிரத்தை விட அதிகமான எண்ணிக்கையில் வக்ஃபே நவ்வின் ஆன்மீகப் படை தயாராகிக் கொண்டிருக்கிறது. ஏறக்குறைய 3000 தண்ணீர் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன. 12 நாடுகளில் 685 பள்ளிக் கூடங்கள் மற்றும் பல மருத்துவமனைகள் நிறுவப்பட்டுள்ளன. 2020–21 ஆம் ஆண்டில் மட்டும் 1,21,179 புதிய பைஅத்துகள் நடைபெற்றுள்ளன. அல்ஹம்துலில்லாஹ்.

கண்ணியத்திற்குரியவர்களே! இறுதியில் நான் முன்னேற்றங்களைப் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியுள்ள மேற்கோள்களை எடுத்துரைப்பதுடன் ஈமானை வலுவூட்டக்கூடிய உண்மையையும் எடுத்துரைக்க விரும்புகின்றேன். கடந்த இரண்டு வருடங்களில் கொரோனா தொற்று பரவியது முதல் உலகமே இந்த அபாயகரமான நோயினால் அவதிக்கு உள்ளாகிக் கொண்டிருக்கிறது. உலகத்தின் எந்தத் துறையும் இதனால் பாதிப்படையாமலில்லை. எல்லா இடங்களிலும் பிரச்சனைகளும், கவலைகளும் தனது வலையை விரித்துள்ளன. அஹ்மதிய்யா ஜமாஅத் அல்லாஹ்வின் அருளால் எல்லா மைதானங்களிலும் முன்னேற்றங்களின் படிநிலைகளைக் கடந்து கொண்டிருப்பது நிச்சயமாக அல்லாஹ்வின் கருணையே ஆகும்.

ஹஸ்ரத் அமீருல் மூமினீன் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முன்னேற்றங்கள் குறித்து எடுத்துரைத்த சிலவற்றை நான் இப்போது எடுத்துக் கூறினேன். இவை யாவும் அல்லாஹ் ஜமாஅத்திற்கு எல்லா இடங்களிலும் முன்னேற்றத்தை வழங்கிக் கொண்டிருக்கின்றான் என்பதற்கு சான்றாகும். ஜமாஅத்தில் இணைபவர்களின் எண்ணிக்கையிலும் பரக்கத் ஏற்படுகின்றது. ஜமாஅத்தின் செல்வங்களிலும் பரக்கத் இறங்கிக் கொண்டிருக்கிறது. அஹ்மதிய்யா கிலாஃபத்தின் மூலமாக, ஜமாஅத் வெற்றி மற்றும் இறையுதவியின் முரசு கொட்டாத இடம் உலகில் எங்குமில்லை.

இறுதியில், நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எழுதிய ஈமானை வலுவூட்டுகின்ற இரண்டு மேற்கோள்களை எடுத்து வைத்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: புதிய பூமி இருக்கும். மேலும் புதிய வானம் இருக்கும். அந்த நாட்கள் இப்போது மிக அருகில் இருக்கின்றன. உண்மையில் சூரியன் மேற்கிலிருந்து உதிக்கும். ஐரோப்பாவுக்கு உண்மையான இறைவனைக் குறித்து தெரிய வரும். அதன் பிறகு தவ்பாவின் வாசல் அடைபடும். ஏனெனில், நுழைகின்றவர்கள் மிகவும் வேகமாக நுழைந்து விடுவர். எவர்களுடைய உள்ளங்களில் இயல்பாகவே இந்த கதவு அடைபட்டுள்ளதோ அவர்கள் இதில் நுழையாமல் மிச்சமிருப்பர். அவர்கள் ஒளியின் மீது அல்ல. மாறாக, இருளுடன் நேசம் வைத்துள்ளனர். இஸ்லாத்தைத் தவிர எல்லா சமுதாயங்களின் அழிவும் மிக சமீபமாக உள்ளது. அனைத்து ஆயுதங்களும் உடைந்து போகும். ஆனால் இஸ்லாத்திற்கான வானத்தின் ஆயுதத்தை தவிர, தஜ்ஜாலிய தன்மைகளை உடைத்து தூள் தூளாக்காத வரை அது உடையவும் செய்யாது. அதன் முனை மழுங்கவும் செய்யாது. இறைவனின் உண்மையான தவ்ஹீதை காட்டில் வாழ்பவர்களும், எந்த வித கல்வியறிவும் இல்லாதவர்களும் தமக்குள் உணர்கின்ற அந்த ஏகத்துவ உணர்வு உலகில் பரவும். அந்நாளில் இட்டுக்கட்டப்பட்ட பாவ மன்னிப்புக் கொள்கையும் இருக்காது. புனையப்பட்ட கடவுள்களும் இருக்க மாட்டார்கள். இறைவனின் ஒரே கை நிராகரிப்பின் அனைத்து திட்டங்களையும் பொய்யாக்கி விடும். ஆனால் எந்த வாளாலும் அல்ல. எந்த துப்பாக்கியாலும் அல்ல. மாறாக முன்னதாகவே ஆயத்தமாக இருக்கும் ஆன்மாக்களுக்கு ஒளியூட்டுவதன் மூலமாக மேலும் தூய உள்ளத்தில் ஓர் ஒளியை இறக்குவதன் மூலமாக. அப்போது நான் கூறுகின்ற இந்தக் கருத்துக்கள் புரியும்.

(மஜ்மூஆ இஷ்திஹாராத் தொகுதி 1 பக்கம் 183, இஷ்திஹார் எண் 159)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இறைவன் எனக்கு மீண்டும் மீண்டும் இந்த முன்னறிவிப்பை வழங்கியிருக்கின்றான். அவன் எனக்கு மாபெரும் மகத்துவம் வழங்குவான். எனது அன்பை உள்ளங்களில் அமர்த்துவான். எனது இயக்கத்தை முழு உலகிலும் பரப்புவான். எல்லா பிரிவுகளின் மீதும் எனது பிரிவை வெற்றி பெறச் செய்வான். மேலும் எனது ஜமாஅத்தைச் சேர்ந்த மக்கள் அறிவு மற்றும் ஞானத்தில் முழுமையை பெறுவார்கள். அவர்கள் தமது உண்மையின் ஒளி மற்றும் தமது ஆதாரங்கள் மற்றும் அடையாளங்களின் அடிப்படையில் எல்லாருடைய வாயையும் அடைத்து விடுவார்கள். எல்லா சமுதாயங்களும் இந்த நீரூற்றிலிருந்து தண்ணீர் அருந்தும். இந்த ஜமாஅத் மிக வேகமாக வளரும், மலரும். அது முழு உலகிலும் வியாபித்து விடும். ஏராளமான தடைகள் வரும். சோதனைகள் வரும். ஆனால் இறைவன் அனைத்தையும் நடுவிலிருந்து அகற்றி விடுவான். மேலும் தனது வாக்குறுதியை முழுமைப்படுத்துவான்.

மேலும் என்னைப் பார்த்து இறைவன் கூறினான்: நான் உம் மீது அருளுக்கு மேல் அருள் புரிவேன். எந்தளவுக்கென்றால், மன்னர்கள் உமது ஆடையிலிருந்து அருளைத் தேடுவார்கள். ஆகவே கேட்பவர்களே! இதை நன்றாக ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். இந்த முன்னறிவிப்புகளை உங்களின் பெட்டகங்களில் வைத்து பாதுகாத்துக் கொள்ளுங்கள். இவை இறைவனின் வார்த்தைகளாகும். இவை கண்டிப்பாக ஒரு நாள் நிறைவேறும்.

(தஜல்லியாத்தே இலாஹிய்யா, ரூஹானி கஸாயின் தொகுதி 23 பக்கம் 408–410)

மக்களே! இது வானங்களையும் பூமியையும் படைத்த அந்த இறைவனின் முன்னறிவிப்பாகும். இதை நன்றாக கேட்டு வைத்துக் கொள்ளுங்கள். அவன் தனது இந்த ஜமாஅத்தை எல்லா நாடுகளிலும் பரவச் செய்வான். சாட்சிகள் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் எல்லார் மீதும் அவர்களுக்கு வெற்றியளிப்பான். அந்த நாள் வரவிருக்கின்றது. இன்னும் சொல்வதென்றால், அவை மிக சமீபத்தில் உள்ளன. உலகில் மரியாதையுடன் நினைவு கூறப்படும் ஒரே மார்க்கம் இதுவாகவே இருக்கும். இறைவன் இந்த மார்க்கத்திலும் இந்த இயக்கத்திலும் அசாதாரணமான முறையில் பரக்கத் வழங்குவான். இதனை அழித்து விட நாடுகின்ற ஒவ்வொருவரையும் தோல்வியுறச் செய்து விடுவான். இந்த வெற்றியானது கியாமத் வருகின்ற வரை என்றென்றும் இருந்து வரும்.

(தஷ்கிரத்துஷ் ஷஹாததைன், ரூஹானி கஸாயின் தொகுதி 20 பக்கம் 66, 67)

وآخر دعوانا أن الحمد لله رب العالمين

(தமிழாக்கம்: மவ்லவி S. அப்துல் காதிர்)

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail:subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

Registered With The Registrar Of The Newspapers For India At No PUNTAM/2016/68785

هفت روزه بدر قادیان Weekly **BADAR** Qadian

Qadian - 143516 Distt. Gurdaspur (Pb.) INDIA

Vol. 7 Thursday 10-17 - March - 2022 Issue. 10-11

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153 79255
e -mail:managerbadrqnd@gmail.com
SUBSCRIPTION
ANNUAL: Rs.575/-

எனது இறைவன் ஒரு நாள் கூட என்னை விட்டு விலகவில்லை. அவன் தனது முன்னறிவிப்பிற்கேற்ப ஓர் உலகத்தை என் பக்கம் குனியச் செய்து விட்டான். நான் ஏழையாக இருந்தேன். அவன் லட்சக்கணக்கான ரூபாயை எனக்கு வழங்கினான். மேலும் நீண்ட காலமாக பொருளாதார வெற்றிகளை குறித்து எனக்கு முன்னரே செய்தி வழங்கினான். மேலும் ஒவ்வொரு முபாஹிலாவிலும் எனக்கு வெற்றியை வழங்கினான். மேலும் எனது நூற்றுக்கணக்கான துஆக்களை ஒப்புக் கொண்டான். மேலும் என்னால் கணக்கிட்டுப் பார்க்க முடியாத அளவிலான அருட்கொடைகளை அவன் எனக்கு வழங்கியுள்ளான்


**வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதிமொழி வழங்கப்பட்ட**
**இமாம் மஹ்தி ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை)**

ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:–

நான் உண்மையாகவே கூறுகின்றேன். இல்ஹாம்களின் தொடர் ஆரம்பமானபோது அக்காலத்தில் நான் இளைஞனாக இருந்தேன். தற்போது நான் முதியவனாகி விட்டேன். மேலும் எனக்கு சுமார் 70 வயது ஆகி விட்டது. மேலும் சுமார் 35 ஆண்டுகள் கழிந்து விட்டன. ஆனால் எனது இறைவன் ஒரு நாள் கூட என்னை விட்டு விலகவில்லை. அவன் தனது முன்னறிவிப்பிற்கேற்ப ஓர் உலகத்தை என் பக்கம் குனியச் செய்து விட்டான். நான் ஏழையாக இருந்தேன். அவன் லட்சக்கணக்கான ரூபாயை எனக்கு வழங்கினான். மேலும் நீண்ட காலமாக பொருளாதார வெற்றிகளை குறித்து எனக்கு முன்னரே செய்தி வழங்கினான். மேலும் ஒவ்வொரு முபாஹிலாவிலும் எனக்கு வெற்றியை வழங்கினான். மேலும் எனது நூற்றுக்கணக்கான துஆக்களை ஒப்புக் கொண்டான். என்னால் கணக்கிட்டுப் பார்க்க முடியாத அளவிலான அருட்கொடைகளை எனக்கு வழங்கியுள்ளான். ஒருவர் தன் மீது இட்டுக்கட்டுகின்றார் என்பதை இறைவன் அறிந்திருக்கும்போது அவரின் மீது இறைவன் இந்த அளவிற்கு அருளும், கருணையும் செய்வது சாத்தியமா? எனது எதிரிகளின் கருத்தின்படி நான் 30, 32 ஆண்டுகளாக இறைவன் மீது இட்டுக்கட்டிக் கொண்டிருக்கின்றேன். மேலும் ஒவ்வொரு நாளும் தினமும் இரவில் நான் என் புறமிருந்து ஓர் இறைக் கூற்றை உருவாக்கிக் கொள்கின்றேன். மேலும் காலையில் அதனை இறைவனின் கூற்று என்று கூறுகின்றேன். ஆனால் இறைவன் என்னுடன் எவ்வாறு நடந்து கொள்கின்றான் என்றால் தம் வட்டத்தில் நம்பிக்கையாளர் என்று அழைத்துக் கொள்ளக் கூடிய மக்கள் மீது அவன் எனக்கு வெற்றியை வழங்குகின்றான். மேலும் முபாஹிலாவின் நேரத்தில் எனக்கெதிராக அவர்களை இறைவன் அழித்து விடுகின்றான். அல்லது இழிவின் அடையாளமாக அவர்களை ஆக்கி விடுகின்றான். மேலும் தனது முன்னறிவிப்புகளுக்கேற்ப ஓர் உலகத்தை என் பக்கம் ஈர்த்துக் கொண்டிருக்கின்றான். மேலும் ஆயிரக்கணக்கான அடையாளங்களை காட்டுகின்றான். இவ்வாறு ஒவ்வொரு மைதானத்திலும் ஒவ்வொரு அம்சத்திலும், ஒவ்வொரு சோதனையின் நேரத்திலும் எனக்கு உதவி செய்கின்றான். இறைவனது பார்வையில் ஒருவர் உண்மையாளராக இருக்காதவரை இதுபோன்ற உதவிகளை அவன் ஒருபோதும் செய்வதுமில்லை. மேலும் இதுபோன்ற அடையாளங்களை அவருக்காக வெளிப்படுத்துவதுமில்லை.

(ததிம்மா ஹகீகத்துல் வஹீ, ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 461)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad



வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதிமொழி வழங்கப்பட்ட
இமாம் மஹ்தி ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) – (1835 – 1908)